நாககுமார காவியம்

(நாடக வடிவம்)

டாக்டர் இராம.மலர்விழிமங்கையர்க்கரசி

படிப்பகம்

வெளியீடு:

www.padippagam.com

ஐஞ்சிறு காப்பிய வரிசையில் மூன்றாம் காப்பியம்

நாககுமார காவியம்

(நாடக வடிவம்)

டாக்டர்.இராம.மலர்விழிமங்கையர்க்கரசி

படிப்பகம்

நூலின் தலைப்பு	:	நாககுமார காவியம்
நூலாசிரியர்	:	டாக்டர்.இராம.மலர்விழிமங்கையர்க்கரசி
உரிமை	:	ஆசிரியருக்கு
இணையபதிப்பு	:	மார்ச் 2020
பக்கங்கள்	:	52
வெளியீடு	:	www.padippagam.com

ஆசிரியரைப் பற்றி

டாக்டர் இராம. மலர்விழிமங்கையர்க்கரசி

தியாகராசர் கல்லூரியில் துறைத்தலைவராகத் திகழும் முனைவர் இராம. மலர்விழிமங்கையர்க்கரசி தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக 20 ஆண்டுகளும், தேசிய பரிசோதனை சேவை (RFU) ஒருங்கிணைப்பாளராக ஏழு ஆண்டுகளும், என்.எஸ்.எஸ். திட்ட அலுவலராக 8 ஆண்டுகளும், Red Ribbon Club பொறுப்பாளராக 5 ஆண்டுகளும், பாடத்திட்ட வாரியத்தின் (Board of studies) உறுப்பினறாக 2 ஆண்டுகளும், கல்லூரி கவுன்சில் உறுப்பினராக 10 ஆண்டுகளுக்கும் மேலாக எனப் பல பொறுப்பு வகித்து வருபவர்.

தொடக்கத்தில் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்பு கணபதி சீதையம்மாள் மகளிர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி, தற்போது தியாகராசர் கல்லூரியில் துறைத்தலைவராகப் பொறுப்பேற்று நடத்திவருபவர். கல்லூரியில் மாணவர்கள் விரும்பும் பேராசிரியராகத் திகழ்பவர். இவர் 18 பேருக்கு ஙடட்ண்ப் வழிகாட்டியாகவும் 8 பேருக்கு முனைவர் பட்ட ஆய்வு வழிகாட்டியாகவும் வழிநடத்தியவர்.

ஒப்பியல் சமயநோக்கில் திருவருட்பா, அருவருட்பா அருள் நூல்களும், மங்கையரின் மனம் மயக்கும் மருதாணி, சீவகசிந்தாமணி (நாடகவடிவில்), வளையாபதி (நாடகவடிவில்), சூளாமணி (நாடகவடிவில்), எனப் பல நூல்கள் எழுதியுள்ளார். இவரது நூல்கள் கல்லூரிகளில் பாடப்புத்தகமாக வைக்கப்பட்டுள்ளன. 18க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

மலேசியா மற்றும் இலங்கையில் நடைபெற்ற தமிழ் இலக்கியத்தொடர்பான மாநாடுகளில் பங்கு வகித்துள்ளார்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் அனைத்து இந்திய மதுரை வானொலியலில் பருவக்கால நிகழ்ச்சியாளராகப் பங்கேற்றவர். பெண்களுக்கான பல புதுமையான நிகழ்ச்சிகளில் ஆற்றல் மிக்கக் கருத்துக்களைக் கூறி அதன்மூலம் பரவலான வாசகர் வட்டத்தை உடைய சிறப்புடையவர். ஐஞ்சிறு காப்பியங்கள், சீவகசிந்தாமணி, வளையாபதி என இவர் எழுதிய ஏழு காவிய நாடகங்களையும் மதுரை வானொலி ஒலிபரப்பியது. நாடக ஆசிரியராக மட்டுமல்லாது மேடையிலும் மற்றும் வானொலியிலும் நாடகக் கலைஞராகப் பங்கேற்று நடித்தவர். வானொலி நாடக எழுத்தாளர்.

22.08.2017 அன்று பொதிகை தொலைக்காட்சியில் பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தி அன்று நேரடி ஒளிபரப்பில் (வர்ணனையாளராக) உரையாற்றினார். விநாயகரைக் குறித்துப் பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களைக் கூறி இலக்கியங்களிலும் மேற்கோள் காட்டி பல சிறப்புகளைத் தொகுத்துக் கூறினார்.

இதோடு அல்லாது சமூகம் சார்ந்த சேவைகளிலும் பங்காற்றுபதில் அதிக ஆர்வம் காட்டுபவர். தியாகராசர் சநந அமைப்பின் மூலம் கிராமங்களுக்குச் சென்று 10 நாள் முகாம்கள் நடத்தியவர். பல இரத்ததான முகாம்களை முன்னின்று நடத்தியவர். பலமுறை இரத்ததானம் செய்தவர். இரத்ததான முகாமைச் சிறப்பாக நடத்தியவர் என அரசு இராசாசி மருத்துவ மனையிடம் சான்று பெற்றவர்.

தமிழ் மரபு அறக்கட்டளையில் தமிழுநாடு பிராந்திய ஒருங்கிணைப்பாளராகத் திகழ்பவர். விக்டோரியா எட்வர்ட் மன்றம். திருவள்ளுவர் கழகம், ஞாலத் தமிழ் பண்பாட்டு மையம் எனப் பல மன்றங்களில் உறுப்பினறாகப் பங்கேற்று செயலாற்றி வருபவர். மேலும் பன்னாட்டு மகளிர் சேர்ந்து இயங்கும் ஐயைக் குழுமத்தில் நிர்வாகியாக (Admin) பங்கேற்றுப் பல செயல்களை ஆர்வத்துடன் வழிநடத்திச் செல்பவர்.

பல்வேறு துறைகளில் ஈடுபாட்டுடன் செயல்படுகின்ற திறமைகொண்ட இவர் பெற்ற விருதுகள் பலவாகும்.

1. லயன்ஸ் கிளப் மதுரை வழங்கிய மனித நேய விருது 2005.
2. நேதாஜி கல்வி அறக்கட்டளை வழங்கிய மகளிர் தின விருது 2011.
3. பாத்திமா கல்லூரி தனது 60வது ஆண்டுக் கொண்டாட்டத்தில் வழங்கிய சிறந்த முன்னாள் மாணவி விருது 2013.
4. தமிழ்நாடு கல்ச்சுரல் அகாடமி வழங்கிய சிறந்த கல்லூரிப் பேராசிரியருக்கான விருது 2015.
5. ஜே.ஷீ.சிவகாசி வழங்கிய ஆற்றல் பெண்மணி விருது 2016.
6. உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம் (மலேசியா) வழங்கிய காப்பியதாய் விருது 2017.

எனப் பல விருதுகளைப் பெற்ற சிறப்பிற்குரியவர். இன்னும் பலர் அறிந்துகொள்ள வேண்டிய ஆளுமையாகத் திகழ்பவர்.

முதல் சுருக்கம்

.இடம். இராசமாகிரியம் நகரம் விபுலாசல மலை.
உறுப்பினர் வனபாலன் வர்த்தமான மகாவீரர், மன்னன், தேவி, கௌதமமுனிவர், மற்றும் முனிவர்குழாம், முரசறைவோன்.

குரல், 1. அழகிய ஒளிவீசும் நவரத்தினங்களும், நறுமணப் பொருள்களும் நிறைந்து திகழ முக்குடைவிளங்குகிறது. அக்குடைநிழலின் கீழே, பிண்டி எனப்படும் அழகிய அசோக மரத்தின் அடியில் நேமிநாதர் எனப்படும் அருகதேவன் இனிதே அமர்ந்திருக்கிறார்,

குரல், 2. அவருடைய திருவடிகளை வணங்குவோம், வாணி எனப்படும் இனவாணயின் பாதத்தையும் சாதுக்களின் பாதங்களையும் தலையால் வணங்குவோம்.

குரல், 1. அவர் அருளுடன் அவரது திருமொழியால் வெளிவந்த ஆகமங்களின் சந்தான காலத்தில் வாழ்ந்த அரசனாகிய நாககுமாரனனின் புண்ணிய மிகு சரித்திரத்தை விவரித்து இனி கூறப்போகிறோம். கேளுங்கள் அவையோரே

> **செந்தளிர்ப் பிண்டியின் கீழ்ச் செழுமணி மண்டபத்துள்**
> **இந்திரன் இனிதேத்தும் ஏந்தரியாசனத்தின் அந்தமாய்**
> **அமர்ந்த கோவின் அருள்புரிதீர்த்தகாலம் கொந்தல ராசன்**
> **நாககுமாரன் நற்கதை விரிப்போம்.**
>
> *(நாககுமார காவியம்-பா.எண் - 1)*

குரல், 2. விளக்கின் நடுவே புகை உண்டாகிறது எனக்கருதி ஒளியையும் விளக்கையும் யாரும் இகழமாட்டார்கள் அதுபோல இவ்வுலகில் நற்பொருளாம் ஞானத்தின் இயல்பை உணர்ந்த சான்றோர்கள். இக்கதையை ஏற்பர், இவ்வுலகத்தில் உள்ளவர்கள் உணர்ந்து கேட்டுமாறு சொல்வது எம் கடமையாகும்.

குரல், 1. நாககுமாரகதையை நாங்கள் கூறக் கேட்டாருக்கு கொடியவினைகள் ஒன்றாக சேர்ந்து வந்து உயிரினைச் சேராது. வினையின் வாய்கள் நன்றாக அடைபட்டுப்போகும்.

குரல், 2. மிகுதியான செல்வத்தை நல்வழியில் கொண்டு வந்து நம்மிடம் சேர்க்கும். நம் உயிரைத் தொடர்ந்து வரும் பழவினைகள் அனைத்தும் நொடிப்பொழுதில் நம்மைவிட்டு நீங்கிவிடும்.

குரல், 1. நாவலந்தீவு நூற்றுத்தொண்ணூறு பகுதிகள் கொண்ட நிலப்பரப்பாகும். அந்நிலப்பகுதியில் ஒன்றுதான், கிடைத்தற்கரிய பெருமைமிக்க பரதகண்டம்.

குரல், 2. இப்பரதகண்டமானது கவிஞர்களும் பண்புடைய சான்றோர்களும் பரவி வாழ்கின்ற அறம் செழிக்கும் பூமியாகும். இதில் உள்ள மகத நாடானது, மின்னலுடன் கூடிய மேகங்கள் வந்து சூழ்ந்து கொண்டு தங்கியிருக்கும் கோலை வனம் மிக்க நாடு.

குரல், 1. பரத கண்டத்தில் முன்னாளில் சிறப்புடன் திகழ்ந்த ஆறு தேசங்கிளில் ஒன்று மகத நாதடு. இது இந்திரன் வாழும் தேவலோகத்திற்கு இணையான செல்வமும் புகழும் நிறைந்த நாடாகும்,

குரல், 2. எல்லாத் திசைகளிலும் திருமகள் மகிழ்ச்சியுடன் நிறைந்து வாழும் இயல்பினை உடைய சிறந்த பாரிசாத மலர்கள் மிகுதியாகப் பூத்துக்குலுங்கும் சோலைகள் ஏராளமாக நிறைந்திருந்தன.

குரல், 1. பல்வகைப்புகழையும் கொண்டு விளங்கிற்று. அந்நாட்டில் அச்சம் என்பது ஒரு சிறிதும் இல்லாத தேவருலகத்திற்கு நிகரானதாகச் திகழ்ந்த புகழ்மிக்க தலைநகரமாக இராசமாகிரியம் அமைந்திருந்தது.

குரல். 2. அகழியின் அருகில் உள்ள கோட்டைமதில்கள் மிகவும் உயர்ந்து இருந்தன. அதனால் விண்ணில் பொங்கித்தவழும் மேகக்கூட்டங்களை அம்மதில்கள் தாங்கி நின்றன.

குரல், 1. நகரத்தில் உள்ள உயர்ந்த மாடமாளிகைகளில் எல்லாம் செம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் வைக்கப்பட்டிருடந்தன.

குரல், 2. அம்மாளிகைகளில் அழகிய மகளீர்கள் ஆடலும் பாடலும் நிகழ்த்தினர். அதனால் பரந்து விரிந்த இன்பம் நகரமெங்கும் நிறைந்து காணப்பட்டது. அக்காட்சி தேவர்உலகத்தையும் குறைபடச் செய்யுமாறு மகிழ்ச்சியுடன் நகரம் விளங்கிற்று.

குரல், 1. இத்தகுசிறப்பு மிக்க இராசமாகிரியத்தைத் தலைநகராகக் கொண்டு சிரேணிக மன்னன் அரசாட்சி நடத்திவந்தான். முன்னர் இவ்வுலக அரசர்கள் செய்த ஆட்சியைக் காட்டிலும் ஐந்து மடங்கு சிறப்பான ஆட்சியைச் செய்பவன் என்ற நற்பெயரைப் பெற்றுவிளங்கினான்.

குரல், 2. அழகுமிக்க மாலைகளால் கட்டப்பட்டுள்ள பொன்மயமாகிய குடையைப் பெற்றவன் வன், மேகம் மழையைத் தருவதைப் போன்று அவரவர் விரும்பும் பொருளை வாரி வழங்கும் வள்ளன்மை உடையவன்.

குரல், 1. வலிமைபொருந்திய அழகிய தோள்களையும் மாலை அணிந்த அகன்ற மார்பினையும் உடையவன், தர்மசீலனாகவும் திகழ்ந்தான்.

குரல், 2. குடிமக்களிடம் ஆறில் ஒருபங்கை மட்டும் வரியாகப் பெற்று நல்லாட்சி நடத்ததும் இம்மன்னனின் தேவிபெயர் சாலினி என்பதாகும்.

குரல், 1. அவள் அன்னப்பறவை போன்று மென்நடை பயில்பவள். வேல்போன்ற கூரிய கண்களைக் கொண்டவள், கற்பின் திறத்தினால்

பெறுதற்கரிய சிறப்பினைப் பெற்றவள். ஒளிவீசும் முழுநிலவு போன்ற முகம் படைத்தவள்.

குரல், 2. அம்மன்னனுக்கு அரசமாதேவி சாலினியைத் தவிர மேலும் எண்ணணாயிம் பேர் உரிமை மகளீராக இருந்தனர், அவர்களுடன் மகிழ்ந்திருந்தலை மட்டும் செய்யாது பகைவர்களையும் வெற்றி கொண்டு செங்கோல் ஆட்சியைச் செய்துவந்தான்.

குரல், 1. அதே நேரம் இராசமாகிரு நகரத்தின் மேற்குத் திசையில் உள்ள விபுலமலையில் ஸ்ரீமகாவீரர் வந்து எழுந்தருளினார்.

குரல், 2 அவ்வாறு காட்டில் நிகழ்ந்த இந்த அதிசயத்தை வனத்தைக் காவல் செய்யும் வனபாலன் மன்னன் சிரேணிகனிடம் சென்று தெரிவித்தான், அரசனும் மனம் மிக மகிழ்ந்த முனிவரைக் காணப் புறப்படும் செய்தியை முரசறைந்து தெரிவிக்குமாறு கட்டளையிட்டான்.

முரசறைவோன் இதனால் சகல ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் இராசகிருக நகரத்தின் மேற்கே விபுலமலை உள்ளது. மேகம் தவழும் இம்மலை மீது மூன்று மதில்கள் கொண்ட பூமியில் ஏழிறை இருக்கை வட்டமாகிய சமவசரணத்தில் வரவீர நாதர் என்ற பெயரினை உடைய ஸ்ரீ மகாவீரர் வந்து எழுந்தருளியிருக்கிறார் அவரைக் காண நம் மன்னர் இராஜாதிராஜ ராஜகம்பீர இராஜகுதிலக ஸ்ரீலஸ்ரீ சிரேணிகர் புறப்படவிருக்கிறார்.

(முரசொளி)

இடிமுரசார்ப்பக்கேட்டு இயம்பிய அத்தினத்தின்
படுமத யானை தேர்மா வானநாற் படையுஞ்சூடிக்
கடிமலர் சாந்து மேந்திக் காவலன் தேவியோடுங்
கொடிநிரை பொன்னெயிற்குக் குழுவுடன் சென்றபன்றே.

நாககுமார காவியம் - முதல் சுருக்கம்- பா- 13.

குரல்,1. அந்நாள், அந்நகரமக்கள் இடிபோன்று முழங்கிய முரசின் ஒயுடன் கூடிய அச்செய்தியைக் கேட்டனர்.

குரல், 2. மன்னனும் நால்வகைப் படைகளும் தன்னைச் சூழ்ந்து வர, மணம்மிக்க மலர்களையும் வாசனைச் சாந்துகளையும் ஏந்திக் கொண்டு தன் பட்டத்துத் தேவியுடன் முனிவரைக் காணப்புறப்பட்டான்.

குரல்,1. வனபாலன் கூறிய வனத்தில் உள்ள அழகிய கொடிகளால் நிறைந்துள்ள பொன்மயமான சமவசரணத்தை நோக்கிச் சென்றான்.

குரல், 2. பொன்மயமான மதில்கள் சூழ்ந்த சமவசரண மண்டபத்தை அடைந்ததும், மன்னன யானை மீதிருந்து இறங்கி உள்ளே நுழைந்தான். தேவியும் அவனுடன் சென்றாள்.

மன்னன் சிரேணிகன், தேவி முனிவரின் பெருமைகளை அறிவாயா?

தேவிசானி ஓரளவிற்கு அறிவேன் நாதரே சற்று விளக்கமாகத் தான் கூறுங்களேன்.

மன்னன் சிரேணிகன். மெய், வாய், கண், மூக்கு செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கி, காதி, அகாதி என்ற இரு வினைகளையும் வென்று புனித நிலைபெற்றவர் இம்மகாவீரர்.

தேவிசானி இவர் புனிதநிலை பெற்றதும் வழங்கும் பெயர்தான் மகாவீரர் என்றும் அவரது இயற்பெயர் வேறு என்றும் கூறுகிறார்களே?

மன்னன் ஆமாம், கேள்விஞானம் உனக்கு உண்டு என்பதையும் மெய்ப்பித்துவிட்டாய். வரவீரநாதர் என்ற பெயரினை உடைய இம்மாமுனி ஸ்ரீ மகாவீரர் என்றே பின்னர் அழைக்கப்பட்டார்.

தேவி இவர் ஞானம் பெற்றது எவ்வாறு?

மன்னன் நான்கு பக்கங்களிலும் அழகிய மலர்களைக் கொண்டுள்ள அசோக மரத்தின் நிழல் அமர்ந்து ஞானம் முழுதுணர்ந்தவர், புறவதழ்களுடன் கூடிய தாமரைமலரின் மீது நான்கு விரல் இடைவெளி விட்டுஅமர்ந்து சமவசரத்தில் அறம் உறைக்கும் இறைச்சக்தி பெற்றவர்.

தேவி வியப்பு மேடுகிறது அரசே

மன்னன் இன்னுங்கேள், ஐந்து மலர் அம்புகளையும் கரும்புவில்லையும் உடைய மன்மதனை விலக்கிய உத்தமன். புகழ்மிக்க சித்த உலகத்தை ஆட்சி செய்யும் ஸ்ரீ வர்த்தமானன் என்ற பெயரை உடைய தூய்மை மிக்கவரும் இவரே.

தேவி அப்படிக்கூறுங்கள். நான் இவரே வர்த்தமான மகாவீரர் என்றே கேள்விப்பட்டேன். நீங்கள் மகாவீரர் என்றவுடன் அவர் வேறு போலும் என எண்ணிவிட்டேன்.

மன்னன் இல்லைதேவி. இரு பெயர்கொண்ட ஒரே முனி இவர்தான். இன்னுஞ் சொல்லப்போனால் ஸ்ரீவர்த்தமான மகாவீரர் என்பதுதான் இவரது பெயர். சிலர் வர்த்தமானர் என்றும், சிலர் மகாவீரர் என்றும் சிலர் வர்த்தமான மகாவீரர் எனவும் அழைப்பர். இப்போது தெளிவாயிற்றா தேவி,

தேவி பெயர்த் தெளிவு கிடைத்துவிட்டது. நம் சமணசமய மார்க்கம் குறித்துதான் சற்று..............

மன்னன் நம்சமணமார்க்கத்தை சிறுவயதில் இருந்தே உன் பெற்றோர் உனக்கு உரைத்திருப்பர். எனினும் உனக்கு நினைவூட்டும்தற்காக முக்கி நியதிகளை இப்போது உனக்குக் கூறுகிறேன்.

தேவி நானும் கேட்கத் தயாராக இருக்கிறேன்.

மன்னன் உயிரைப் பற்றிக் கொண்டு பிறப்புக்குக் காரணமான கொடியவினைகள் காதி, அகாதி என இருவகைப்படும், ஞானாவர்ணீயம், தர்சணா வர்ணீயம், மோகனீயம், அந்தராயம் என்ற நான்கும் காதி வினைகள் எனப்படும். வேதனீயம், ஆயுள், நாமம், கோத்திரம் என்ற நான்கும் அகாதி வினைகள் எனப்படும்.

தேவி ஆமாம்.. இன்னும் உள்ளது தொடர்ந்து கேள், நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் எனும் இவற்றைப் போற்றி வாழும் ஓர் உயிர், இந்த எண்வகை வினைகளையும் அழித்தால் சித்த உலகத்தை அடைந்து பேரின்பத்தில் திளைத்துப் பிறவா நிலையைப் பெறும்.

தேவி நாம்தான் வினைகளில் கிடந்து உழன்று கொண்டு இருக்கிறோம், இந்த முனிவர்கள் எல்லாம் ....

மன்னன் சரியாகப் புரிந்து கொண்டாய். இவர்கள் எல்லாம் வினைகளை விடுத்தவர்கள். காதிவினைகளை வென்றதும், தீர்த்தங்கர புண்ணியம் பெற்றவர்களாகக் கருதப்படுவர். இவர்களுக்கு சமவசரண அறவுரை மண்டபம் இந்திரனால் அமைக்கப்படும் அங்கு அமர்ந்து அறவுரை செய்பவர் "அருகர்" என்று புகழப்படுபவர், அவரே தீர்த்ங்கரர் என்ற நற்பெயரையும் பெறுவார். நம் சமண சமயத்தில் நிகழ்காலத் தீர்த்தங்கரர்கள் ஸ்ரீரிஷபதேவர் முதலாக ஸ்ரீவர்த்தமானர் ஈறாக இருபத்து நால்வர் உள்ளனர்,

தேவி என்ன ஆச்சரியம்..... இருபத்து நால்வர் உள்ளனரா? அவர்கள் யார் யாரெனக் கூறமுடியுமா உங்களால்?

மன்னன் ஏன் முடியாது? அவர்களைப் பற்றிய சித்திரகவி ஒன்றுள்ளது.

தேவி சித்திரகவி என்றால் சித்திரம் வரைந்தது போலவே கவிதையையும் உடன் எழுதுவரே அதுதானை.

மன்னன் ஆமாம். இதோ இந்த சமய அறங்கள் கூறும் குறிப்புகள் அடங்கிய இச்சுருள் பையுனுள் அச்சித்திரகவியையும் வைத்துள்ளேன். உனக்குக் காட்டுகிறேன்.

தேவி சீக்கிரம் எடுங்கள். எனக்கு மிகவும் ஆவலைத் தூண்டுகிறீர்கள்.

மன்னன் இரு.... இரு...... இதோ இதுதான் அந்தச் சித்திரகவி

தேவி ஆஹா......... தேரினைப் போன்ற சித்திரத்தில் கவிதை தரப்பட்டுள்ளது. இதை எங்கு இருந்து ஆரம்பிப்பது எங்கு முடிப்பது... எழுத்துகளால் ஆகியுள்ளது. இடப்புறம் இருந்து படிப்பதா, வலப்புறம், இருந்து படிப்பதா? மேருந்து கீழா? கீழிருந்து மேலா? ஒரே குழப்பமாக உள்ளதே?

மன்னன் ஒகோ......... இக்கவிதையின் மேற்புறம் உள்ள அமைப்பைப் பார்த்து தேர் என்று முடிவிற்கு வந்துவிட்டாயா? இது தேர் அல்ல. சித்திரகவிமாலை - மலைப்பந்தம் அமைப்புடையது. இதில் உள்ள

கட்டங்களை நோக்கினால் நன்குபுரியும். ஒருமுறைக்கு இருமுறை உன்னிப்பாகக் கவனித்தால் அதில் உள்ள எண்கள் உனக்குக் கவிதையைப் படிக்கத் துணைநிற்கும்.

சித்திர கவி

(11.ய - தனியே இணைக்கப்பட்டுள்ளது)

மலைப்பத்தம் வாசிக்கும் வழியை நான் கூறுகிறேன். மலையில் உள்ள எண் ஒன்று ஆதிபாவன் முதலாக நேரே வாசித்து, மேலேறி நேராக வாசித்து, மேலேறி நேராக வாசித்து இப்படியே வாசித்து உச்சிக்குச் சென்று நடுவே இறங்கினால் பாடல் முடிவடையும்.

தேவி, அடேயப்பா...... இதை படிக்க ஆர்வம் மிகுகிறது. தாருங்கள் நான் வாசிக்கிறேன்.

மன்னன், விளையாட்டை நாம் அரண்மனையில் வைத்துக்கொள்ளலாம், அருகரை வழிபடச் செல்ல வேண்டும் நானே வாசிக்கிறேன்.

மன்னன்,
1. ஆதிபகவன் ரிஷப தேவர்
2. ரருள்மே வஜதி நாதர் சம்பவ
3. நாதர் ரபிநந்தனர் சுமதி நாதர்
4. அழகு பதும நாபர் சுபார்சவ
5. நாதர் சந்திரப் பிரபர் மலரும்
6. புஷ் பதந்தர் சீதள நாதர்
7. சீரே யாம்ச நாதர் மாபெரும்
8. வாசு பூஜ் யர் விமல நாதர்
9. அனந்த நாதர் அறிதரும நாதர்
10. சாந்திநாதர் குந்து நாதர்
11. மாநெறி அரநாதர் மல் நாதர்
12. மூதறிவுற்ற முனிசு விரதர்
13. நமிநாதர் மிக்க அருள் ம நேமி
14. நாதர் பாரோர் தொழு மகாவீரர்
15. நாதர் பாரோர் தொழு மகாவீரர்
16. நீதி நாடிய அறுநாலு அன்பினர்
17. அவர் பகவானே அருமை
18. அருகனடி தொழ அறநெறி பெருகுமே

தேவி, அடடே... இவர்கள் தான் அந்த இருபத்து நால்வரா, இவர்கள் அத்தனைபேரும் அருகர்களா?அதெப்படி-

மன்னன், அருகநிலை பெற்றவர் உலக உயிர்கள் நலம் பெறுவதற்காக அறவுரை கூறி வாழும் வழியைக் கற்பித்தபின்னர், அகாதி வினைகள் நான்கையும் கெடுத்துச் சித்த உலகம் சென்று சித்தர் என்ற நிலையைப் பெறுவர்.

தேவி, சித்தநிலையா? அது என்ன நிலை?

மன்னன் ஓர் உயிர் எண்வினைகளையும் ஒருங்கே அழிக்கும் போது நேராக சிஒழ் நிலையைப் பெறும், அவ்வுயிருக்கு " அருகர்" பதவி உண்டாகாது, ஆனால் " அருகர்" பதவி பெற்ற எல்லா உயிர்களுக்கும் சித்தர் நிலை நிச்சயம் உண்டு.

தேவி, அருகர் நிலைக்குச் செல்வதற்குப் பரநிலைகள் ஏதேனும் உள்ளனவா?

மன்னன் சரியாகக் கேட்டாய் தேவி, சமண சமயத்தில் ஐவரை வணங்கும் வணக்கம் உள்ளது. பஞ்ச மந்திரம் எனவும் கூறப்படும். சர்வாதுக்கள் முதல்நிலை - உபாத்தியாயர் இரண்டாவது நிலை, ஆச்சாரியர் என்பது மூன்றாவது நிலை. சித்தர் நான்காவது நிலை, இவற்றையெல்லாம் நிறைவு செய்வதான இறுநிலை அருகர் என்பது, இம்முறைவைப்பில் மேருந்து கீழாகவும் அருகர், சித்தர், ஆச்சாரியர், உபாத்தியாயார், சர்வசாதுக்கள் என்றும் கொள்வர். அருகர் நிலை பெற்றவர்கள் தீர்த்தங்கரர் எனப்படுவர்.

தேவி ஆஹா... என்னே அற்புதநிலைகள், அருகரை வணங்கச் செல்வதற்குமுன் அவர்களைப்பற்றி அறிந்து கொண்டு செல்வதில் எவ்வளவு மகிழ்ச்சி.

மன்னன் ம்....... விளக்கம் கூறியதில் நேரம் போனதே தெரியவில்லை. வா..... மகாவீரரைச் சென்று தரிசிக்கலாம்.

குரல் (மன்னன் தன் உடல் நிலம்மீது பொருந்துமாறு படிந்து வணங்கி எழுந்தான், துதிப்பாடல்.)

கஞ்சமலர் திருமார்பிற் தரித்தாய் நீயே
காலமொடு மூன்றுணர்ந்த கடவுள் நீயே
பஞ்சாத்தி தானுரைத்த பரமன் நீயே
பரமநிலை ஒன்றெனவே பணித்தாய் நீயே
துஞ்சா நல் உலகு தொழுந்துாயன் நீயே
தொல் வினையெல்லாம் எரித்த துறவன் நீயே
செஞ்சொற் பாவையை நாவிற் சேர்த்தாய் நீயே
சிரீவர்த்த மானன் எனுந் தீர்த்தன் நீயே(
அறவன் நீ அமலன் நீ ஆதி நீயே
ஆரியன் நீ சீரியன் நீ அனந்தன் நீயே
தரிலோக லோகமொடு தேயன் நீயே
தேவாதி தேவனெனுந் தீர்த்தன் நீயே
எரிமணி நற் பிறப்புடைய ஈசன் நீயே
இருநான்கு குணமுடைய இறைவன் நீயே
திரிபுவனந் தொழுதிறைஞ்சும் செல்வன் நீயே
சீரிவர்த்த மானனெனும் தீர்த்தன் நீயே.

(நாககுமார காவியம் - முதல் சுருக்கம் - பா.எண் - 17-18)

மன்னன்,தேவி இருவரும் சரணம்...... சரணம்........ பாதமலர்கள்...... சரணம்.

ஸ்ரீ மாகவீரர், மங்கலம் உண்டாகட்டும்.

வனபாலன், மகாமுனி, இவர்கள் இராசமாதிரியத்தின் மன்னன் சிரேணிகமகராஜாவும், அவர்தம் தேவி ஷானி அரசியாரும் ஆவர். தங்களின் அருள் வேண்டி வந்துள்ளனர்.

ஸ்ரீ மாகவீரர், நாடாளும் வேந்தர்களுக்கு இந்தக் காடுறைமுனிவன் என்ன கூறிவிட முடியும் வனபாலா' அனைத்தும் அவர் அறிவர்.

வனபாலன், இகலோகபரிபாலனம் அவரிவர். இருந்தாலும் தங்களின் அருள் உலக உபதேசம் வேண்டி வந்துள்ளனர் சுவாமி.

மன்னன் ஆமாம்' மகாமுனி' ஜைன சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தங்கள் திருவாயால் கேட்டருள் பெற ஆவலாக உள்ளோம்.

ஸ்ரீ மாகவீரர், ஆர்வம் உண்டெனில் உரைப்பதில் எனக்கும் தடைஏதும் இல்லை. நமது ஜைன சமயத்தில் ஐந்து அத்திகாயங்கள், ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், ஒன்பது பதார்த்தங்கள் என்று தத்துவவிசாரங்கள் விரிவடைகின்றன. இவையே சமண சமயத்தின் அடிப்படைக்கோட்பாடுகள்.

வனபாலன், அத்திகாயங்கள் என்றால் என்ன? மகாமுனிகளே'

ஸ்ரீ மாகவீரர், அஸ்தி காயம்- அஸ்திகாயம் - அத்திகாயம். அஸ்தி என்பது அத்தி எனப்பட்டது. அத்தி என்றால் எப்போதும் இருப்பது. காயம் என்பது இடப்பரப்பில் எண்ணற்ற பிரதேசங்களைக் கொண்டு எப்போதும் இருக்கும் பொருள்களைக் குறிக்கும் சொல்லாகும்.

மன்னன், எப்போதும் இருப்பதென்றால் எவையெல்லாம் இதனுள் அடங்கும்.

ஸ்ரீமகாவீரர் சமண சமயம் கூறும் அத்திகாயம் ஐந்து வகைப்படும், அவை சேதனம், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம் என்பன, **சேதனம்,** என்பது உயிர், ஆன்மாவைக் குறிக்கும். **புத்கலம்,** உயிரற்றது, அசேதனப்பொருள்-அணுக்களால் ஆன உடலைக் குறிக்கும். தர்மம், உயிர், புத்கலம் ஆகியவற்றின் இயக்கத்திற்கு உதவுவது. அதர்மம், உயிர், புத்கலம் ஆகியவை தங்கி நிலைத்து இருப்பதற்கு உதவுவது, ஆகாயம், மேற்கூறிய நான்கு பொருள்களும் இருக்க இடம் தருவது,

தேவி இவ்வைந்து மட்டும்தானா? இவற்றுடன் வேறு ஏதேனும் உள்ளதா முனிவரே'

ஸ்ரீமகாவீரர் சரியாகக் கேட்டீர்கள்' இந்த ஐந்துடனும் காலம் என்பதைச் சேர்த்தால் ஆறு திரவியங்கள் என்ற தத்துவம் கிடைக்கும். ஷட்திரவியங்கள் எனவும் இதனைக் குறிப்பர்.காலம் என்பது பொருள்களின் வளர்ச்சி - மாற்றம் -தோற்றம் - மறைவு என்பனவற்றை அறிய உதவவுது ஆகும்.

வனபாலன், ஐந்துஅத்திகாயங்கள், ஆறு திரவியங்கள் அதற்கு அப்புறம் ஏழா.....ஏழில் ஏதாவது உண்டா முனிகளே'

ஸ்ரீமகாதேவர், உமது யூகமும் நல்லதே, அடுத்ததாக உள்ளது ஏழுதத்துவங்கள், உயிர், உயிரற்றது, ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என்பன ஏழுதத்துவங்கள் ஆகும். சப்த தத்துவங்கள் எனவும் அழைப்பர், உயிர், உயிரற்றது என்பதை முன்னரே கண்டோம். அடுத்ததான ஊற்று என்பது வினைவரும் வழி. செறிப்பு என்றால் வினைவரும் வழியைத் தடுப்பது, உதிர்ப்பு என்பது வினைகளை ஆன்மாவில் இருந்து உதிர்ப்பது. வீடு என்றால் வினைகளை வென்ற ஆன்மா சென்றடையும் சித்த உலகம் - மோட்சமாகும்.

தேவி, அருமையான விளக்கங்கள். இனி எட்டில் ஏதாவது உள்ளதா?

ஸ்ரீமகாதேவர், இது என்ன எண்விளையாட்டா? வரிசையாகத் தொடர்வதற்கு அடுத்து வருவது எட்டல்ல - எளிதாக எட்டாத ஒன்பது பதார்த்தங்கள். முயன்றவர்க்கு எளிதில் எட்டிவிடவல்லது. முன்னர் கூறிய ஏழுதத்துவங்களுடன் புண்ணியம் பாவம் என்ற இரண்டையும் சேர்த்து ஒன்பது பதார்த்தங்கள் என்று சமணம் போற்றும் இதனை நவ பதார்த்தங்கள் என்றும் அழைப்பர், இவையே சமணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்.

மன்னன், மங்காப் பொருளாய் எல்லாவிடத்தும் அருள்மயமாய் விளங்கும் உத்தமரே' உங்கள் விளக்கங்கள் எம்மை உண்மைநிலை உணர வைத்தன. தங்கள் அருட்தொண்டு அகில உலகிற்கும் சென்று பரவ வேண்டும், நானும் ஆவணசெய்கிறேன். விடை தாருங்கள்' முனிகளே'

ஸ்ரீமகாவீரர் அரசே' சென்று வாருங்கள்' நாட்டு மக்களுக்கு நல்லாட்சியோடு, நல்உபதேசங்களையும் இணைத்து வழங்குங்கள், ஜைன வழியில் அனைவரும் நடப்போம்' நாடும் உய்யும், நாமும் உய்வடைவோம்.

மூவரும் சரணம்' அருகரின் அடிகளே' சரணம்.

குரல், சிறந்தசெல்வமுடைய சிரேணிக மன்னன், சமவசரணத்தில் அறம்புகன்ற ஸ்ரீவர்த்தமானரை பல்வேறு துதிப்பாடல்களின் மூலம் துதி செய்து போற்றினான்.

நவபத நன்னயம் ஆறும் நவின்றாய் நீயே
நன்முனிவர் மனத்திசைந்த நாதன் நீயே
உவைமையிலா ஐம்பதமும் உரைத்தாய் நீயே
உத்தமர் தம் இருதயத்துள் உகந்தாய் நீயே
பவமயமாய் இருவினையைப் பகர்ந்தாய் நீயே
பரம நிலை அமர்ந்த பரமன் நீயே
சிவமயமாய் நின்ற திகழ் தேசன் நீயே
சிரீவர்த்தமானன் எனும் தீர்த்தன் நீயே

(நாககுமார காவியம் - முதல் சுருக்கம். 20)

குரல்,2. அருகநிலை பெற்ற தீர்த்தங்கரர்கள் இந்திரனால் அமைக்கப்பட்ட சமவ சரணம் என்ற மாமண்டபத்தின் உச்சியில் அமர்ந்து அறம் கூறும் போது “திவ்யத்வனி” என்ற “ஓம்” என்ற ஒ உண்டாகும்,

குரல்,1. அதன்பொருளை உயிரினங்கள் அனைத்தும் புரிந்து கொள்ளும் வகையில் பதினெட்டு வகையான மொழிகளில் விளக்கமாக எடுத்துக் கூறும் ஆற்றலும் அறிவும் பெற்றவர்களே “கணதரர்” எனப்படுபவர்.

குரல்,2. ஒவ்வொரு தீர்த்தங்கரர்களுக்கும் கணதரர்கள் உண்டு, பகவான் ஸ்ரீவர்த்தமானருடைய சமவ சரணத்தில் பிரதம கணதரராக இருந்து அறிவுவிளக்கம் கூறியவர் கௌதம கணதரர் என்பவர்

குரல்,1. வர்த்தமானதரின் மலரடிகளை வணங்கிய மன்னன் சிரேணிகன் துறவியர் தலைவராக விளங்கும் கௌதம கணதரரின் வெற்றி தரும் பாதங்களைப் பணிந்து வணங்கினான்.

குரல்,2, அழகிய கயல்போன்ற கண்களையும், குண்டலங்களையும் அணிந்துள்ள மன்னன் தேவியும் கூடியிருந்த மக்களும், முனிவர்களும் கௌதம கணதரரைக் கண்டு வணங்கி மகிழ்வுற்றனர்.

குரல்.1, அதன் பின்னர், வீரக்கழல் அணிந்த மன்னன், மங்கலம் நிறைந்த நல்ல பஞ்சமியின் பொருள் பொதிந்த நற்கதையினைக் கூறி அருளுமாறு வேண்டினான்.

குரல்.2, நல்ஞானத்துடன், நற்காட்சியையும், நல்லொழுக்கத்தையும் விரும்பிப் போற்றும் முனிவரான கௌதமர் பிறர் உள்ளக் குறிப்பை உணர்ந்து கொண்டு பஞ்சமி கதையினைக் கூறத் தொடங்கினார்.

கௌதம முனிவர், நாவலந்தீவில் நல்ல பரத கண்டம் உள்ளது. அதன் வமை மிக்க மன்னர்கள் பலர் வாழும் சிறந்த நாடு மகத நாடாகும். அந்நாட்டில் கூவும் குயில்களும் தேன் சிந்தும் மலர்களும் நிறைந்த சோலைகளால் சூழப்பட்டுள்ள சிறந்த நகரமான கனகபுரம் உள்ளது. கனகபுர நகரத்தை ஆட்சிசெய்யும் நல்லரசன் சயந்தரன் என்பவன் ஆவான். அவனுடைய தேவியின் நற்பெயர் விசால நேந்திரை என்பது. இவர்களின் மகன் தேன் சிந்தும் மாலை அணிந்த சீதரன் என்ற பெயரை உடையவன், இம்மன்னனுக்கு வாய்ந்த நல்ல அமைச்சர்கள் ’ நயந்தரன்’ என்பவனாவான்.

மன்னன் சயந்தரனுக்கு விசால நேந்திரை என்ற பட்டத்து அரசியுடன் எண்ணாயிரம் தேவியர் உரிமை மகளிராக உள்ளனர், வெற்றிகள் பல கண்ட மன்னன், தன் தேவியருடன் இன்பமாக வாழ்ந்து வந்தான், அவன் தான் கொண்டு வந்த அரிய பொருட்களுடன் மரக்கலத்தில் உடன் வந்த ஒரு பெண்ணின் உருவப்படத்தையும் காண்பித்தான். வணிகன் வாசவன் காண்பித்த படத்தைப் பார்த்த மன்னன் சயந்தரன் படத்தில உள்ள பெண்ணின் அழகில் மயங்கி மோகம் கொண்டான். இவ்வளவு அழகுமிக்க இவள் கின்னரர் குலத்துப் பெண்ணோ? இவ்வளவு அழகுமிக்க இக்காரிகை யாரோ? என்று வினவினான். அதைக் கேட்ட வாசவன், புகழ்மிக்க நாடு சுராட்பிரதேசம் என்பதாகும்.அந்நாட்டில் பல்வகை மக்களும் வாழும் பரங்கிரியா நகரம் உள்ளது, அந்நகரில் வாழும் செல்வன் சிரீவர்மன் என்பானுக்கு மனைவி சிரீமதி என்பவள். இவர்களுடைய நன்மகளின் பெயர் பிரிதிவி தேவி என்பதாகும். வணிகன் வாசவன் அப்பெண்ணின் அழகினைப்

பாங்குறாடுத்துக் கூறினான், அரசன் சயந்ததரனும் திருமண வேள்விச் சடங்குகளைச் செய்து பிரிதிவி தேவியை திருமணம் செய்து கொண்டு அவளுடன் களித்திருந்தான். மன்னன் சயந்தரன் பிரிதிவி தேவியுடன் கூடி இன்பம் நுகர்ந்ததனோடு அமையாது அவளுக்கும் பெருந்தேவிப் பட்டமும் கொடுத்துச் சிறப்புச் செய்தான், பிற பெண்கள் எல்லாம் பணிந்து ஏவல் செய்யுமாறு பெருமையுடன் பிரிதிவி தேவி வாழ்ந்து வந்தாள். அவ்வாறு வாழ்ந்து வரும் ஒரு நாளில்

(இசைக்குறிகள் - காட்சியும் - காலமும் விலகித்ததரிகிறது)

குரல்.1, வசந்த காலத்தின் வருகையைக் கொண்டாடும் விளையாட்டிடலர் ஈடுபடும் பொருட்டு அரசனும் தேவிமாரும் மலர்கள் நிறைந்த பூஞ்சோலைக்கு விருப்பத்துடன் சென்றடைந்தனர்,

குரல்.2, அப்போது அங்கு பிரிதிதேவி பல்லக்கில் ஏறிக்கொண்டு குளத்தில் நடைபெறும் நீர் விளையாட்டைக் காண்பதற்குச் சென்றாள்.

குரல்.1, ஆங்கே தான் செல்லும் வழியில் தனக்கு முன்பாக யானையின் மீது அமர்ந்து செல்லும் மங்கையைக் கண்டு அவள் யார் எனவினவினாள்.

குரல்.2, அழகான திருமுடியை அணிந்திருக்கும் மாமன்னனின் பட்டத்து மாதேவியே அவள் என்று மலர் மாலை சூடிய கூந்தலுடைய தோழி பதில் கூறினாள்.

குரல்.1, தோழி சொன்ன பதிலைக் கேட்டு பிரிதிவிதேவி “அவள் விசால நேந்திரையோ? என்னைத் தன்னுடைய கால் வீழ்ந்து பணிய வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் என்னைக் காண்பதற்கு நிற்கின்றாள் போலும்” என்று மறுமொழி கூறினாள்.

குரல்.2, பின்னர் இறைவன் ஆலயத்தை அடைந்து நூல்களில் சொல் யுள்ள முறைப்படி இறைவன் திருப்பாதங்களைப் பணிந்து வணங்கினாள்.

குரல்.1, இறைவனை நோக்கி, “கொல்லாமை என்ற நல் விரதத்தைப் போற்றிய கோமானே’ நின்னுடைய திருவடிகளைத் தொழுது வணங்குபவர்கள், தீமையைத் தரும் கதிகளில் இருந்து விடுபட்டு, சிறப்பு மிக்க முத்தி உலகத்தைச் சென்றடைவது மிகவும் எளிதாகும். என்று கூறித் துதி செய்தாள்.

குரல்.2, பின்னர், ஆலயத்தில் இருந்த வினைகளை அகற்றும் துறவுநெறியை மேற்கொண்டு வீற்றிருந்த பிரஹி தாஸ்வர முனிவரை வணங்கினாள், தன்னைப் பணிந்து வணங்கிய பரிதிவி தேவியை மேலான அம் முனிவர் நல்லுரைகள் கூறிவாழ்த்தினார்.

குரல்.1, தேவியானவள் முனிவரை நோக்கி, ” அழகு மிக்க நல்ல தவம் எனக்குக் கை கூடுமோ? ” என்று வினவினாள் மணிவிளக்காய் ஒளிவீசும்

மாதவனாம் அம்முனிவரும் “அளவிட்டுச் சொல்ல முடியாத நற்குணங்களின் இருப்பிடமாகத் திகழும் நல்ல மகனை நீ புகழுடன் பெறுவாய்” என்று பதில் கூறினதார்.

குரல்.2, அதுகேட்டு மகிழ்ந்து முனிவனின் திருவடிகளை பிரிதிவிதேவி தன்னுடன் வந்த தோழியருடன் பணிந்தாள், அன்றைய தினமே நன்மகனைப் பெற்றதைப் போன்று பெருமகிழ்வு கொண்டாள், பின்னர் தன்னுடைய பெரிய அரண்மனையிலே புகுந்து இனிதே வாழ்ந்திருந்தாள்’.

பணிபவட்கு நன்குரையிற் பரமமுனி வாழ்த்த
அணிபெறவே நற்றவமு மாமோ எனக்கு என்றாள்
கணிதமிலாக் குணச்சுதனைக் கீர்த்தியுடனே பெறுவை
மணி விளக்கமே போன்ற மாதவனுந்தானுரைத்தான்,
நின்ற கனந் தன்னுடனே நீடுபோய்த் தவம்பட்டுப்
பின்னர் அறவுரைகள் பெருமிதமாய்க் கேட்டு விதி
வென்ற பரமனடி விமலமாய்த் தான் பணிந்து
அன்றுதான் புத்திரனை அவதரித்தாற் போன்று மகிழ்ந்தாள்.

(நாககுமாரகாவியம் - முதல் சுருக்கம் - பா.எ. 37,38)

(முதல் சுருக்கம் நிறைவடைந்தது)

படிப்பகம்
மிகக் குறைந்த செலவில்
நீங்கள் எழுதிய புத்தகங்கள்
கதைகள், கவிதைகள்,
கட்டுரைகள், மற்றும் பல தொகுப்புகளை
இணையத்தில் வெளியிட
இன்றே தொடர்புகொள்ளுங்கள்
Website: www.padippagam.com
Mobile : 89032 32330.

இரண்டாம் சுருக்கம்

இடம். மகத நாடு - அரண்மனை
உறுப்பினர் மன்னன் சயந்திரன், தேவிபிரிதிவிதேவி, திகம்பர முனவிர்,

குரல்.1, ஆலயம் சென்று பிரஹிதாஸ்வர முனிவரைக் கண்டுவந்த பிரிதிவி தேவி அதன் பின்னர் மன்னர் சயந்திரனின் அழைப்பின் பேரில் வசந்த விழாவைக் கொண்டாட வனவிளையாட்டிற்காகச் சென்றாள்.

குரல்.2., ஆனால் விளையாட்டில் மனம்கொள்ளாது ஆலயத்தில் விசலநேத்திரையைக் கண்டது பற்றியே எண்ணி சலனப்பட்டாள், எனவே மன்னனுடன் இயல்பாக வனவிளையாட்டில் அவளால் கலந்து கொள்ள முடியவில்லை.

குரல்.1, மன்னன் சயந்திரன் விளையாட்டில் பிரிதிவி தேவி தன்னுடன் கலந்து கொள்ளாமையால் கவலையுற்றாள் எனினும் தன்னுடைய வனவியாட்டினை இனிதே முடித்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பனான்.

குரல்.2., அங்கு தனது மனம்கவர்ந்த கோதையாகிய காயத்திதேவியிடம் வனம் விளையாட்டில் இன்பமாக இல்லாமைக்கான காரணத்தை வினவினான்.

குரல். 1, அதற்கு அவள் தான் விசாலநேந்திரையைக் கண்டதும், வணங்க விரும்பாததுமான காரணத்தைக் கூறாமல் மறைத்துவிட்டாள்.

மன்னன்,சயந்திரன், தேவி' உனக்கு என்ன ஆயிற்று' நேற்று வசந்தவிழாக் கொண்டாட்டம். அருமையான வனப்பம் மிகு வனப்பகுதி. இன்பம் துய்க்க வேண்டிய வேளைகளும், ஏதுக்களும் நிறைந்திருந்தன. எனினும் உன் முகக்குறிப்பு கண்டு அனைத்தையும் ஒதுக்கிவிட்டு அரண்மனைக்கு வந்துவிட்டோம். ஏன்? ஏன்? இவ்வாறு நடந்து கொள்கிறாய்?

பிரிதிவிதேவி, ம்..... (சமாளித்தவாறு) இல்லை... இல்லை.......அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான் எப்போதும் போல் இயல்பாகவே உள்ளேன்.

மன்னன் புனைந்துரைக்க முயல வேண்டாம். நீ இல்லை எனும் போதே ஏதோ இருக்கிறது என்று உடன் இணைந்தே ஒக்கிறது. எதுவாயினும் என்னுயிர் நாயகிக்கு என்னிடம் கூற மனம் இல்லையா?

பிரிதிவிதேவி, (தடுமாற்றத்துடன்) அதாவது........ அன்று கோயிலுக்கு சென்றபோது பிரகிதாஸ்வர முனிவரைக் கண்டேன். பின்னர் கனவொன்றும் கண்டேன் இருநிகழ்வுகளும் என்னை குழப்பமடையச் செய்துள்ளன. மகிழ்வதா? வேண்டாவா எனப் புரியவில்லை.

மன்னன் சயந்திரன், முனிவரைக் கண்டேன் - கனவுகண்டேன் என்னதேவி' அரைகுறையாகவே சொன்னால் எனக்கு எப்படி விளங்கும். சற்று விளக்கமாகத்தான் கூறேன்.

தேவி, ஆலயத்தில் முனிவரைக் கண்டு வணங்கினேன். அப்போது அவர் " சிறந்த புத்திரன் உனக்கு பிறப்பான் என்று அருளாசிவழங்கினார்.

மன்னன் சயந்திரன், (மகிழ்ச்சியுடன்) நம்குலம் தழைக்கும் மங்கலச் செய்தி நல்லது தானே இதற்கும் உன் கனவிற்கும் என்ன தொடர்பு? கனவுக் காட்சி என்னவெனக் கூறு' எனக்கு ஆவல் மிகுதியாக ஏற்படுகறிது.

தேவி நாதரே' நேற்றுத் துயில் கொள்ளும்போது மனோகரம் என்ற நான்காவது யாமத்தில் எனக்குக் கனவு ஒன்று தோன்றியது. திரண்டு உயர்ந்த திமில் கொண்ட காளை ஒன்றும் இளங்கதிரவனைப் போன்று ஒளிவீசும் செல்வன் ஒருவனும் நம்முடைய அரண்மனைக்குள் நுழைவது போன்றும் கனவுக் காட்சி இருந்தது.

மன்னன் சயந்திரன, ஆஹா....... காளை, இளைஞன் ஒருவன் நம் இல்லத்திற்குள் நுழைவது மங்கல சகுனமாகத்ததான் தெரிகிறது. எனக்கு உன்மொழிகள் மகிழ்வையே ஏற்படுத்துகின்றன. எனவே நமக்கு நல்லதே நடைபெறவிருக்கிறது. எனினும் உடனே கிளம்பு ஜீனாலயம் சென்று வணங்கி திரம்பரமுனிவரிடம் கனவு பற்றிக் கூறி விளக்கம் கேட்போம்.

தேவி, ஆகட்டும் நல்யோசனை அருகதேவன் அருள் வந்து சேரட்டும். உடனே தயாராகிவிட்றேன்.

(இருவரும் ஜீனாலயம் சென்று முனிவரைக் காண்கிறார்கள் - ஆலயச்சூழல் - மணியொ, மங்கல மந்திரங்களின் ஒ ஆகியன இசைக்கப் பெறதல்)

தேவியும்,அரசனும். மகாமுனிக்கு வணக்கங்கள்.

திகம்பரமுனிவர், மங்கலம் உண்டாகட்டும். என்னைக் காண வந்த காரணம்.

மன்னன் முனிகளே? எம் தேவி ஒரு கனவு கண்டதாகக் கூறுகிறாள். அதன்பொருள் என்னவெனத் தங்களிடம் கேட்டறிதற்காக வந்தோம்,

திகம்பரமுனிவர், அரச குடும்பத்து மங்கையரின் கனவில் அர்த்தங்கள் உண்மையாகவே இருக்கும், தேவி முதல் நீவீர் கண்ட கனவு யாதெனக் கூறுங்கள்'

தேவி, அன்றொருநாள் இரவில், மனோகரம் என்ற நான்காவது யாமத்தில் திமில் கொண்ட காளை ஒன்றும், இளங்கதிர்வனைப் போன்று ஒளிவீசும் செல்வன் ஒருவனும் எங்களது அரண்மனைக்குள் நுழைவுதனைப் போலக் கனவு ஒன்று கண்டேன், அதன் விளக்கம்யாதெனக் கூறுங்கள் முனிகளே'

திகம்பரமுனிவர், நீவீர் கண்ட கனவின் பயனைக் கூறுகிறேன் கேட்பீராக' (கண்மூடிமௌனித்து சிறிது நொடிப்பொழுது சென்ற பின்) எல்லாம் மங்கலக்

குறியீட்டுச் சின்னங்கள் நிறைந்த கனவுதான். திமில் கொண்ட எருதினைக் கனவில் கண்டதால், உங்களுக்கு இனிய புதல்வன் ஒருவன் பிறப்பான்.

இருவரும், *(மகிழ்ச்சிப்பெருக்கில்)* அப்படியா சுவாமி'.....

திகம்பரர், ஆமாம். அதனோடு இளங்கதிரவனையும் கண்டதனால் அப்புதல்வன் இந்த உலகையெல்லாம் வெற்றி கொண்டு, குடிகளை நன் முறையில் ஆட்சி மூலம் காப்பாற்றி, சிறப்புடைய தவத்தினை மேற்கொண்டு, இருவினைகளையும் வென்று இறுதியில் வீடுபேற்றினை அடைவான்.

இருவரும், நீங்கள் கூறும் செய்திகள் மனக்கண் முன் விரிகிறது. அதே இவ்வளவு மகிழ்வைத்தரும் போது உண்மைப்பொழுதுகள் உன்னதமானவே அனைத்தும் அருகனருள் அன்றி வேறேது'.

திகம்பரமுனிவர், அருகனின்றி அணுவும் அசையாது. அதுமட்டுமன்றி புதல்வன் பிறப்பின் போது உடன்நிகழ்வுகள் சிலவும் கூடவே நிகழும். அவைகண்டு அஞ்ச வேண்டியது இல்லை.

தேவி உடன் நிகழ்வுகளா? அவை என்னவென்று உரையுங்கள் *(கலக்கத்துடன்)*

மன்னன் எனக்குப்புதல்வன் வந்து பிறந்த பிறகு அவன் தாங்கள் கூறிய அத்துணைச் சிறந்த சிறப்புகளையும் பெறுவான் என்பதற்கான ஆயத்தமான தகுந்த அறிகுறிகளாகவே அவை இருக்கும், கலங்காதே தேவி'. முனிவரே அப்படியேதேனும் அறிகுறிகள் உண்டா?

திகம்பர முனிவர் ஆம் உண்டு. நான் கூறும் அறிகுறிகளைக் கவனமாகக் கேளுங்கள். யான் கூறியவை உண்மையென அறிகுறிகளைக் கண்டதும் நினைவு கூர்வீர்களாக'.

மன்னன் அப்படியே ஆகட்டும் சாமி'. சித்தமாக இருக்கிறோம்

திகம்பரமுனிவர் சமவ சரணத்தில் வீற்றிருக்கும் ஜீனபகவானுடையதும் நின் நந்தவனத்தில் உள்ளதும், தேவர்களால் வழிபாடு செய்யப்படுவதுமான சித்தகூட சைத்தியாலயத்தின் திருக்கதவம் மக்களால் திறக்க முடியாமல் மூடிக்கிடக்கிறது. அந்த ஆலயத்தில் உன் சிறுவன் பாதம் பட்டதும் திருக்கதவம் தானே திறந்து கொள்ளும்

தேவி', (ஆச்சரியத்துடன்) ஆஹா பின்னர்..............

திகம்பரமுனிவர்'. நீங்கள் வழிபாடு செய்து கொண்டு இருப்பீர்கள். அச்சமயத்தில் அந்தச் சிறுவன் ஆங்குள்ள நாகக் குளத்தில் வழுக்கி விழுவான்.

தேவி'. ஐயஹோ'. என்னாகும் என்புதல்வனுக்கு (பயத்துடன்)

திகம்பரமுனிவர் அஞ்சாதே தேவி'. அதனால் ஆபத்து ஒன்றும் நேராது. அதிசயத்தக்க நன்மையை அடைவான்.

மன்னன் நல்லது முனிவரே'. அவனது வீரம் பற்றிய நல்அறிகுறி ஏதாகினும்.

திகம்பரமுனிவர் ஆமாம்'.மேலும் அடக்க முடியாத வமையான ஒரு முரட்டுக் குரிரையையும் நீலகிரி என்ற மதயானையையும் அடக்கிப் பெருமிதமாய் அதனைச் செலுத்துவான்.

<u>பிரிதிவிதேவி கண்ட கனவு</u>

இருவரும் பிரிதன்றி இன்புறு போகந்துய்த்து
மருவிய துயில் கொள்கின்றார். மனோகரமென்னும் யாமம்
இருண்மனை இமிலேறு ஒன்று இளங்கதீர் கனவில் தோன்றப்
பொருவிலாள் கண்டெழுந்து புரவலர்க்கு உணர்த்தினாளே

(நாககுமார காவியம் - இரண்டாம் சுருக்கம் - பா எண் - 42)

<u>மன்னனும் தேவியும் முனிவரிடம் கனவின் பயன் கேட்டல்</u>

வேந்தன் கேட்டு இனியனாகி விமலன் ஆலத்துட்சென்று
சேந்தளிர்ப் பிண்டியின் கீழ்ச் செல்வனை வணங்கி வாழ்த்தி
காந்திய முனிக்கு இறைஞ்சிக் கணப்பயன் நுவலவென்றான்
ஏந்திள முலையினாளும் இறைவனும் இருந்து கேட்டார்.

(நாககுமார காவியம் - (பா எண் - 43)

<u>மகன் பிறப்பான் எனக் கூறுதல்</u>

அம்முனி அவரை நோக்கி அருந்துநற் கனவு தன்னைச்
செம்மைஂயுன் இருவர் கட்குஞ் சிறுவன் வந்து உதிக்கும் என்றால்
கம்பம் இல் நிலங்கள் எல்லாம் காத்து நற்றவமும் தாங்கி
வெம்பிய வினையறுத்து வீடு நன்கடையும் என்றார்.

(நாககுமார காவியம் - (பா எண் - 44)

<u>மகன் பிறந்த பின்னர் நிகழ்வன</u>

பொன்னெயிலுள் வீற்றிருக்கும் புனிதன் திருக்கோயில்
நின்சிறுவன் சரணத்தான் நீங்குந் திருக்கதவம்
நன்னாக வாவிதனின் னழுவப் கதமுண்டாம்
மன்னாக மாவினொரு மத மடக்கி செலுத்திடுவான்

(நாககுமார காவியம் - 2ம் சுருக்கம் - பா.எ - 46)

குரல்'. 2 கருணைமிக்க பிரஹிதாஸ்வர மாமுனிவர் இவ்வாறு கூறியதைக் கேட்டதும். சயந்தர மன்னன் தன் தேவி பிரிதிவி தேவியோடு இணைந்து முனிவரின் திருவடிகளைப் பணிந்து விடைபெற்று அரண்மனையை அடைந்தான்.

குரல்'. 2. அங்கு மன்னனும் தேவியும் இன்பமாக வாழ்ந்த நாளில் அரசி பிரிதிவி தேவி, பூவுலகத்தை ஆட்சி செய்யப்போகும் தன்மைந்தன் பூரண கர்ப்த்தில் உண்டாக்கிய மயக்கக் குறிப்பினால் மண்ணை இனிதென உண்டாள்.

குரல்’. 1. அம்மயக்கக் குறிப்பு உண்டாகும் போதெல்லாம் புதல்வினின் இன்சொல்மொழியினைக் கேட்டு மகிழ்ச்சியில் திளைத்தாள். அதனால் மின்னல் ஒளியையும் தோல்வியடையச் செய்யும் அவள் உறுப்பு நலம் சிவப்பானது.

குரல்’. 2. ஒன்பது மாதம் நிறைவடைந்தவுடன் ஒரு நன்னாளில் திருக்குமரன் அவதரித்தான். முழுச் சந்திரனைக் கண்டதும் கடல் நீர் பொங்குவதைப் போன்று மன்னன் சயந்திரனும் மகிழ்ச்சிக் கடல் திளைத்தான்.

குரல்’. 1. தன்னுடைய கருவூலத்தை உலகில் உள்ள மக்களுக்கெல்லாம் தானம் செய்து, மகன் பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடினான். சிங்கம் போன்று ஆற்றல் மிக்க அச்சிறுவனுக்குச் சிறப்புடன் பிரதாபந்தன் என்று பெயரிட்டு அழைத்தனர்.

குரல்’. 2. பிரிதிவிதேவி ஒரு நாள் ஏனைய தேவியர்களையும் அழைத்துக்கொண்டு, வணங்குதற்குரிய பரமன் ஆலயத்தில் பக்தியுடன் வழிபாடு செய்யச் செல்ல வேண்டுமென்று கருதினாள்.

குரல்’. 1. அதன் பொருட்டு நறுமணம் மிக்க மலர்களையும் வாசனைச் சாந்தினையும் பல பொன் தட்டுகளில் எடுத்துக் கொண்டுஇ தன்மைந்தன் பிரதாபந்தனையும் அழைத்துக் கொண்டு ஆலயம் சென்று சேர்ந்தாள்.

குரல்’. 2. கோயில் கதவில் அச்சிறுவனின் திப்பாதங்கள் பட்டதும் கதவங்கள் திறந்தன. பிரிதிவிதேவி தனது தாதிப் பெண்களுடன் உள்ளே செல்லும் போது தன் பிள்ளையை வெளியில் விட்டுவிட்டு உள்ளே கடவுளை வழிபடச் சென்றாள்.

குரல்’. 1. அச்சமயம் அங்குள்ள நாகவாவி என்ற குளத்தினுள் சிறுவன் நழுவி விழுந்து விட்டான். அதனைக் கண்ட தாயும், குழந்தை மீதுள்ள அன்பினால் உடனே குளத்தில் வீழ்ந்து விட்டாள்.

குரல்’. 2. ஊன் கறை படிந்த வெற்றி வேனை ஏந்திய சயந்தரன் மனைவி பிரிதிவிதேவி நல்வினைப்பயனால் நீரில் மூழ்கவில்லை. நீரின் மேலே நின்றாள்.

குரல்’. 1. பிறைச்சந்திரன்ப் போன்ற நச்சுப் பற்களை உடைய நாகம் தன்னுடைய படத்தின் மீது பாதுகாப்புடன் அச்சிறுவனைத் தாங்கிக் கொண்டிருந்தது. அந்த அதிசயக் காட்சியைக் கண்டவர்கள் செய்தியை மன்னனிடம் தெரிவித்தனர்.

குரல்’. 2. மன்னன் வியப்படைந்து பறையோசை, இடியோசை போன்று ஆனந்தப் பேரிகையானது முழங்க, ஆலயத்திற்கு வந்து இறைவனை வழிபாடு செய்துவிட்டு, மகனையும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

ஆலயத்தில் நிகழ்ந்த அற்புதங்கள்.

சிறுவன் தன் சரணந் தீண்டச் சினாலயங் கதவு நீங்கப்
பிறைநுதல் தாதி தானும் பிள்ளைவிட்டு உட்புகுந்தாள்
நறைமலர் வாவி தன்னுள் நற்சுதன் வீழக் காணாச்
சிறையழி காதல் தாயும் சென்றுடன் வீழ்ந்தாளன்றே.

(நாககுமார காவியம் - இரண்டாம் சுருக்கம்-பா.எ-51)

கறைகெழுவேனான் தன்காரிகை நீர்மேல்நிற்பப்
பிறையெயிற்று அரவின் மீது பெற்றிருந்தனையற் கண்டு
பறையீடி முரசும் ஆர்ப்பப் பாங்கினால் எடுத்து வந்து
இறைவன் வணங்கி ஏத்தி இயன் மனை புகுந்தானன்றே

(நாககுமார காவியம் - இரண்டாம் சுருக்கம்-பா.எ-52)

நாககுமாரன் எனப்பெயரிடுதல்

நாகத்தின் சிரசின் மீது நன்மையில் தரித்தென்றெண்ணி
நாகநற்குமாரனென்று நரப்தி நாமஞ்செய்தான்
நாக நேர கலத்தானை நாமகட்சேர்த்தி இன்ப
நாகவிந்திரனைப் போல நரபதி இருக்கும் அந்நாள்.

(நாககுமார காவியம் - இரண்டாம் சுருக்கம்-பா.எ-53)

குரல்’. 1 நாகமானது தன்னுடைய தலையின் மீது அச்சினைத் தாங்கி, யாதொரு துன்பமும் செய்யாமல் காப்பாற்றியதும் அதனால் நற்குணம் மிக்க அச்சிறுவனுக்கு“நாககுமாரன்” என்று மன்னன் பெயர் சூட்டினான்.

குரல்’.2. பின்னர், அழகிய மார்பினையுடைய நட்பு மிக்க அக்குமாரனுக்குக் கலைகளின் இருப்பிடமாகத் திகழும் நாமகள் என்ற கலைமகள் அருட்கடாட்சம் முழுதும் கிடைத்தது. அழகும் ஆற்றலும் நிறைந்த வீரத்திருமகனாகத் திரண்டு நின்றான்.

குரல்’.1. ஒருநாள் பஞ்ச சுகந்தனி என்ற கணிகை தன்னுடைய கன்னியர்களான கின்னரி, மனோகரி என்ற இருவரையும் அழைத்துவந்து அரசனின் அடிபணிந்தாள்.

குரல்’.2. அரசனிடம் தன்குமாரிகள் இருவரும் வீணை இசையில் வல்லவர்கள். தங்களுக்கு இணையானவர் யாருமில்லை என்ற இறுமாப்பு எய்தி நிற்கின்றனர். இவர்களை வெல்லுந்திறமைமிக்கவர்களை அறிவது என்னால் இயலாத காரியம். எனவே அரசன் துணை நிற்க வேண்டும் எனவும் கூறினாள்.

குரல்’.1. அரசன் ஏற்பாடு செய்வதாகக் கூறியவுடன் இவர்களின் இசைப்புலமையை அறிந்து கூறும் வல்லவனுக்கே இவர்கள் மனைவியர் ஆவர் என்றும் கூறினாள். அனைவரும் அவர்கள் இசையைக் கேட்டிறியும் நாளும் வந்தது. அனைவரும் கேட்கத்தொடங்கிய வேளையில்.........

குரல்'.2. இசைக்கலையில் சிறந்து விளங்கிய நாககுமாரன் அக்கன்னியர் இருவரும் இசைத்த இசையின் தன்மையைக் கூர்ந்து கவனித்தான். இருவரில் இளையவள் இசையை மிகவும் இனிமையானது என்றான்.

குரல்'.1. மன்னன் சயந்தின் மிக்கவியப்பெய்தினான். தான் அறிந்த வரையில் இருவரும் இனிமையாவே இசைத்தனர். என்றும் மூத்தவளின் இசையானது திசை விளக்குப் போன்று ஒளிவீசி, திசையெல்லாம் புலமையுடன் திகழ்கிறது. ஆனால் இவர்களுக்குள் வேறுபாடு உள்ளதை நாககுமாரன் எவ்வாறு தெரிந்து கொண்டான்.

குரல்'.2. அதற்கு நாககுமாரன், யாழினை மீட்டி வாசித்த மூத்தவள் வேறொன்றையும் நோக்காமல் கீழ்நோக்கியே பாடினாள். ஆனால் இளையவள் தான் திறமையாக இசைத்ததுடன், மூத்தவளின் இசையையும் பாட்டையும் அதன் பொருளையும் ஒருங்கே கூர்ந்து கவனித்தாள், அதனால் இளையவள் இசையே சிறந்தது என்று கூறினான், அனைவரும் நாககுமாரனை வியந்து பாராட்டினார்கள்.

குரல்'.1. பலவகையான அணிகலன்களை அணிந்துள்ள பஞ்ச சுகந்தினி என்ற அக்கணிகையானவள், தூய்மையான சிற்பம் போன்று திகழும் தன் கன்னியர் இருவரையும், தூய்மையான சிந்தாமணி போன்ற நாககுமாரனுக்கு மணம் செய்து கொடுத்தாள்.

குரல்'.2. அழகிய வேனையுடைய நாககுமாரனும், மங்கையர் இருவரும் இணைந்து புலன் இன்பங்களைக் குறைவின்றித் துய்த்து இன்பக்கடலுள் மூழ்கினார்கள். இங்ஙனம் வாழ்ந்து கொண்டிருக்க ஒரு நாள்.................

யானையின் பிளிறல் ஒ மக்கள் அலறல் ஓசை -பின்னணி இசையில் அமைய வேண்டும்)

குரல்'.1. அரசனின் பட்டத்துயானை நீலகிரி மதங்கொண்டு கட்டுத்தறியை முறித்துக் கொண்டு, நகரினுள் நுழைந்து மக்களையும் மாடமாளிகைகளையும் அழிக்கத் தொடங்கியது. மக்கள் மன்னனிடம் முறையிட்டனர்.

குரல்'.2. மன்னன் மூத்த குமாரன் சிரீதரனை அனுப்பினான் அவனால் யானையை அடக்க முடியவில்லை. பின்னர் நாககுமாரன் சென்று, யானையின் மதத்தை அடக்கி அதன்மீது அமர்ந்தபடி அரசனிடம் வந்தான்.

குரல்'.1. அரசன் சயந்திரன் வியப்படைந்து நாககுமாரன் யானையை அடக்கி வென்றதைப் பாராட்டி அதனை நாககுமாரனுக்கே பரிசாகத்தந்தான்.

குரல்'.2. மற்றொருநாள், ஒரு பொல்லாக் குதிரையானது தனக்கு எதிர்ப்பட்டவரை எல்லாம் கடித்தும் மிதித்தும் தன் விருப்பப்படி நகரில் சுற்றி வந்தது. நகரமக்கள் மன்னனிடம் முறையிட்டனர். மன்னனும் நாக குமரனை அதனை அடக்கிவருமாறு அனுப்பினான்.

குரல்’.1. நாககுமாரனும் அக்குதிரையின் கொட்டத்தை அடக்கி, அதன்மேல் அமர்ந்து, நகரின் பல பகுதிகளிலும் ஊர்ந்து சென்றான். இறுதியில் வெற்றிவேல் வேந்தனின் முன் சென்று குதிரையை நிறுத்தினான்.

குரல்’.2. மன்னனும் மனம் மிக மகிழ்ந்து அக்குதிரையை நாககுமாரனுக்கேப் பரிசாக வழங்கினான், நாககுமாரனும் அக்குதிரையைத் தன்னுடைய லாயத்தில் கொண்டு போய்ச் சேர்த்தான்.

நாககுமாரன் யானை, குதிரையை அடக்குதல்.

நாகமிக்கதங் கொண்டோடி நகர்மாடம் அழித்துச் செல்ல
நாகநற்குமரன் சென்று நாகத்தை அடக்கிக்கொண்டு
வேகத்தின் விட்டு வந்து வேந்த நீகொள்க என்ன
வாகு நற்சுதனை நோக்கி யானை நீ கைக்சகொள் என்றான்.
மற்றொருநாள் குமரன் துட்டமாவினை அடக்கி மேற்கொண்டு
உற்றவூர் வீதி தோறும் ஊர்ந்து உதிக்கோடியாட்டி
வெற்றிவேல் வேந்தற் காட்டவிழைந்து நீ கொள்க என்றான்.
பற்றியே கொண்டு போகிப் பவனத்திற் சேர்த்தினானே.

(நாககுமார காவியம் - இரண்டாம் சுருக்கம் - பா.எண் - 57,58)

நாககுமாரன் திருமகனாகத் திகழ்தல்

அறவுரை அருளிச் செய்த அம்முனி குறித்த நான்கும்
திறவுதின் எய்தி நல்ல சீர்கலைக் கடலை நீந்திப்
படுமதக் களிறுந் தேர்மா புகழ் பெற ஊர்ந்மூன்றாம்
பிறையது போல் வளர்ந்து பீடுடைக் குமரன் ஆனான்.

குரல்’.1. இவ்வாறு, பிஹிதாஸ்வரமுனிவர் கூறிய அறவுரையில் குறிப்பிட்ட நிகழ்வுகள் அனைத்தும் நடந்தன. கோயில் திருக்கதவும் திறத்தல், நச்சுக் குளத்தில் வீழ்ந்து எழுதல், யானையை அடக்குதல், குதிரையை அடக்குதல் என்ற நான்கு வகையான அறிகுறிகளும் தவறாமல் நடந்தேறின.

குரல்’.2. நாககுமாரனும் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து கலைக்கடலைக் கடந்து புலமை மிக்கவனாகத் திகழ்ந்தான், மேலும் யானை, தேர், குதிரைகளில் ஏறித் தன்னைப் பலரும் பாராட்டும் வண்ணம் நகரில் வலம் வந்தான்.

குரல்’.1. மூன்றாம் பிறை போல் இனிதே வளர்ந்து வரும் பெருமைமிக்கத் திருமகனாகத் திகழ்ந்தான் நாககுமாரன். நாககுமாரன் அடைந்து வரும் சீரையும் சிறப்பையும் கண்டும் கேட்டும் உள்ளம் பொறாமையால் கொதிப்படைந்த விசால நேத்திரை தன் மகன் சிரீதரனை அழைத்து வரப் பணித்தாள்.

குரல்’.2. தாயின் அழைப்பை ஏற்றுவந்த சிரீதரனிடம் “குமாரனே’. நீயோ பட்டத்துக்கு உரியவன். எனினும் உன்னைப் புகழ்வார் ஒருவரும் இல்லை. நாககுமாரனைப் பற்றியே நாடு நகரமெல்லாம் புகழ்கின்றது.அச்சிறப்பை

என்வாயால் கூற இயலவில்லை. அதற்குரிய நற்றவமும் உனக்கு வாய்க்கவில்லை, உன்னைப்பலரும் வசைபாடுகின்றனர். புகழ் இல்லாமல் வாழ்தல் இளவரசற்கு அழகன்று. இனி உனக்கு இடையூறு இன்றிப் பாதுகாத்துக் கொள்வாயாக'. என்று கூறினாள்.

குரல்'.1. தாய்கூறிய சொல் கேட்ட சிரீதரனுடைய உள்ளத்தில் மேன்மேலும் நாககுமாரன் மீது பொறாமை உணர்வு குடிகொண்டது, அதனால் அந்நாக குமாரனை எப்படி வெற்றி கொள்வது என்று சதியாலோசனையை உள்ளத்தில் தீட்டினான்.

குரல்'.2. பின்னர் வெளியில் சென்று தங்கள் தோள் வமையால் ஒவ்வொருவரும் ஆயிரம் வீரர்களை ஒரே சமயத்தில் கொன்று குவிக்கும் ஆற்றல் மிகுந்த ஐந்நூறு மல்லர்களைத் தனக்குத் துணையாகத் திரட்டிக் கொண்டான்.

குரல்'.1. அவர்களின் பலத்தால் நாககுமாரனைக் கொல்லும் சமயம் எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்த்தூக கொண்டிருந்தான், ஒருநாள் நாககுமாரன் தன் தேவியர் இருவருடன் நகரின் அருகில் இருந்த 'குச்சம்' என்னும் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தான். அப்போது............

குரல்'.2. அவன் தாய் பிரிதிதேவி அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, பூமாலை, குங்குமம் முதயவற்றைப் பொன் தட்டுகளில் ஏந்திய தோழியர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டாள். நகரின் வீதிவழியாக சென்று கொண்டிருந்த அவளை சயந்திர மன்னன் தன் மாளிகையின் மேல் மாடத்தில் இருந்து கண்டு கொண்டான்.

குரல்'.1. உள்ளத்தில் பொறாமை உணர்வு மிக்க, விசால நேத்திரை அரசன் அருகில் சென்று "அரசே'. தங்கள் மனைவியாகிய பிரிதிவிதேவி ஒரு கள்ள நாயகனுடன் உறவு கொண்டுள்ளாள். இப்படித்தான் நாள்தோறும் அவனுக்கு உணவு, உடை முதயவற்றைக் கொண்டு போய்த் தருகிறாள். இன்றும் அதோ கொண்டு செல்கின்றாள் பாரீர்'. என்று வீதியைச் சுட்டிக் காட்டினாள்.

குரல்'.2. அரசனும் அவள் போக்கைக் கவனித்தான். அப்போது பிரிதிவிதேவி நாககுமாரன் நீராடுகின்ற குளத்தின் கரையைச் சென்றடைந்தாள். தாயைக் கண்டதும் நாககுமாரன் கரையேறி வந்து அன்புடன் அவள் பாதங்களைக் பணிந்தான்.

குரல்'.1. நாககுமாரனும் நுண்ணிய் இடையையுடைய அவன் மனைவியரும் பிரிதிவிதேவி கொண்டு வந்த மாலை, சந்தனம், ஆடை முதயவற்றை அணிந்து கொண்டனர், உணவருந்திய பின்னர் வேள் போன்ற தன் தாயுடன் சேர்ந்து தங்கள் மாளிகையை அடைந்தனர்.

குரல்'.2. இக்காட்சிகறைள எல்லாம் நேரில் கவனித்தூக கொண்டிருந்த சயந்தர மன்னன் பிரிதிவிதேவி கற்புக்கரசியே என்பதை உணர்ந்து கொண்டான்.

குரல்’.1. விசால நேத்திரை பொறாமை உணர்வினால் பொய்யுரை கூறுகின்றாள் என்பதைப் புரிந்து கொண்டு, அவள் மீது அளவற்ற சினம் கொண்டான்.

குரல்’.2. பின்னர், சயந்தர மன்னன் பிரிதிவிதேவியின் மாளிகைக்குச் சென்றான். அவளைப் பார்த்து “மாதே’. நீ எங்கே, என்ன காரணத்திற்காக நகருக்குப் புறத்தே சென்றாய்?” என்று வினவினான். தேவியும் ” உம் புதல்வனுடைய நீர் விளையாட்டைக் காண்பதற்காகச் சென்றேன்” என்றாள்.

குரல்’.1. அதற்கு அரசன், “தேவியே’. இனிமேல் நீங்கள் இருவரும் வனவிளையாட்டு, புனல் விளையாட்டு என்று நகருக்கு வெளியில் எங்கும் செல்லவேண்டாம், நாக குமாரனும் உன்னுடன் மாளிகைக்கு உள்ளேயே விளையாடுவானாக’. என்று கட்டளை இட்டுச் சென்றான்

குரல்’.2. அரசன் இட்ட கட்டளையைக் கேட்ட பிரிதிவிதேவி மிகுந்த துயரமும் சோகமும் அடைந்தாள். தன் வலக்கரத்திக் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு துன்பத்தில் ஆழ்ந்திருந்தாள். அதனை அறிந்து நாககுமாரன் வியப்படைந்தான், விரைந்து வந்து தாயை வணங்கி அவள் துயரத்திற்கான காரணம் யாதென வினவினான்.

குரல்’.1. அதற்கு அவள், இனிமேல் நாம் நகருக்கு வெளியில் எங்கும் செல்லக்கூடாது. அரண்மனைக்குள்ளேயே இருக்கவேண்டும் என்று மன்னன் கட்டளைஇட்டுச் சென்றுள்ளதால் வருந்துவதானகச் கூறினாள்.

குரல்’.2. அதனைக் கேட்ட நாக குமாரன் அடங்காச் சினம் கொண்டு நீலகிரி” யானையின் மீது ஏறி வெளியில் சென்றான். நகர்வலத்திற்கு ஏற்பாடு செய்தான்.

குரல்’.1. வாத்தியங்கள் முழங்கின, மதயானைகள் ஊர்வலம் வந்தன. பலவகை இசைக் கருவிகள் முழங்கின. பலரும் நடனமாடியவாறு வீதிதோறும் சென்றனர்.

குரல்’.2. இளைய அரசகுமாரனது இந்தவருகையைக் கண்டோர் வியப்படைந்தன, இத்தகு ஆரவாரத்துடன் நகர்வலம் வருவன் யாவன்? என்று? மன்னன் வாயிற்காவனிடம் வினவினான்.

குரல்’.1. அரண்மனைவாயிற் காவலன்’. தங்கள் மகன் நாககுமாரன் நகரில் உலா வருகிறான்” என்று கூறினான், அதனால் கோபம் கொண்ட மன்னன், பிரிதிவிதேவி தான் இட்ட கட்டளையை மீறுமாறு மகனை ஏவி இருக்கிறாள் என்று கருதி மனம் வருந்தனரின்.

குரல்’.2. வருத்தம் நாககுமாரன் மீது சினமாக மாறியது, “என் கட்டளையை மீறிய நாககுமாரன் மனைக்குச் சென்று அங்குள்ள ஆடை அணிகலன்களையும், பிற நற்பொருள்களையும் கவர்ந்து வாருங்கள்” என்று ஏவலர்க்குக் கட்டளையிட்டான்” அவர்களும் அவ்வாறே செய்து பொருட்களைக் கவர்ந்து அரசன் கருவூலத்தில் சேர்ப்பித்தனர்.

குரல்'.1. வெற்றியானையின் மீது அமர்ந்து உலாச் சென்ற நாககுமாரன் தன் பவனியை முடித்துக் கொண்டு தாயின் அரண்மனைக்கு வந்தான். அங்கு பலவகைப் பொருட்கள் களவாடப்பட்டிருப்பதையும் தாய் தன் கழுத்தணிகளை இழந்து வருந்துவரையும் கண்டு யாது நிகழ்ந்தது எனத் தாயிடம் வினவினான்.

குரல்'.2. தாய் நடந்ததைக் கூறி வருந்தினாள். நாககுமாரன் தாய்க்கு ஆறுதல் கூறிவிட்டு நகரில் பல அரசர்கள் சேர்ந்து சூதாடும் இடத்திற்குச் சென்று அவர்களுடன் சூதாடினான். அவர்களின் அணிகலன்களையெல்லாம் சூதில் வெற்றி கொண்டு அரண்மனையை அடைந்து தாயிடம் அவற்றைக் சமர்ப்பித்தான்.

குரல்'.1. சூதாட்டத்தில் தோல்வியடைந்த சிற்றரர்கள் பலரும் அரசவைக்குச் சென்று அரசர்க்கு அரசனாகிய சயந்தரனைத் தொழுது வனங்கினர்.

குரல்'.2. அந்நேரம் அரசன் அவர்களைப் பார்த்து வியப்படைந்து அவர்தம் ஆபரணமாலைகள் எங்கே? முத்துமாலைகள் எங்கே? கைகளை அலங்கரிக்கும் கடகங்கள் வாகுவலயங்கள் எல்லாம் எங்கே? நீங்கள் இக்கோலத்தில் இங்கு வரக் காரணம் யாது? என்று கேட்டான்.

குரல்'.1. அவர்கள் "அரசே'. நாங்கள் அனைவரும் தங்கள் மகன் நாககுமாரனுடன் விளையாட்டாகச் சூதாடியதால் அனைத்து ஆபரணங்களையும் தோற்றுவிட்டடோம். அவற்றை நாக குமாரன் கொண்டு சென்றான் எனக்கூறினர்.

குரல்'.2. அரசனும் மிக்க ஆச்சரியம் அடைந்தான். தன் மகனின் ஆற்றல் கண்டு வியந்தவன், தன்னை விடவா அவன் சிறப்படைந்தவன் என ஆணவத்தால் எண்ணினான். தன் மகனுடன் சூதாடி அப்பொருள்களை மீட்க விரும்பனான்.

குரல்'.1. அதனால், இனியசொற்களைப் பேசி, மகனை அழைத்து வந்து இரண்டு முறை சூதாடினான். இரண்டிலும் நாககுமாரனே வெற்றியடைந்தான். தோல்வியுற்ற தந்தை தான் அணிந்திருந்த அணிகலன்களையும் கருவூலச் செல்வங்களையும் இழந்து விட்டான்.

<u>தோற்றவுரசர்கள் சயந்தரனிடம் முறையிடுதல்</u>

அரசர்கள் அனைவரும் அதிகராசனைத் தொழ
அரவம் அணியாரமும் ஆன முத்து மாலையும்
கரமதிற் கடகமும் காய்பொற்கே யூரமும்
எரிமணிகள் இல்லதை வேந்து என்ன இக்கூற்றென

(பா - 70)

<u>தந்தை சூதில் நாககுமாரனிடம் தோற்றல்</u>

**சூதினாற் செயித்து நின் சுதன் அணிகள் கொண்டனன்

சூதிலாட என்னுடன் சுதனழைப்ப வந்த பின்
சூதினில் தொடங்கி நற் சுதனுந் தந்தை அன்பினிற்
சூதிரண்டி லாட்டினுஞ் சுதன் மிகச் செயித்தனன்.
(பா-எண்-71)

குரல்'.2. வெற்றியடைந்த நாககுமாரன் அரசனுடையபொன் மாளிகைக்குச் சென்றான். அங்கு தன் தாயின் அரண்மனையில் தான் வைத்திருந்த பொருள்களையும் அணிகலன்களையும் மீண்டும் எடுத்து வந்து தாயிடம் கொடுத்தான்.

குரல்'.1. பிறகு சூதாட்டத்தில் அரசர்களிடம் தான் வெற்றி கொண்ட ஆபரணங்கள் பொருட்கள் அனைத்தையும் அவர்களிடமே திருப்பித் தந்தான். அரசர்கள் அனைவரும் அகமகிழ்ந்து போற்றினார்கள்.

குரல்'.2. இனியும் நாககுமாரனுடைய வெளி விளையாட்டுக்களைத் தடுப்பதால் பயன் ஒன்றுமில்லை என்று மன்னன் கருதினான், உடனே, கொல்லர்களை அழைத்து வந்து நகரின் வெளியே அழகிய ஓர் அரண்மனையை அமைக்குமாறு கட்டளை இட்டான்.

குரல்'.1. அவ்வாறு அமைக்கப்பட்ட அழகிய அம்மாளிகையில் நாககுமாரனை விருப்பத்துடன் குடியேறச் செய்தான், அவ்அரண்மனைக்கு "அலங்கரியபுரம்" என்று பெயரிட்டு அழைத்தான். அன்று முதல் நாககுமாரன் அந்த அரண்மனையில் வசித்து வரத்தொடங்கினான்.

வெற்றிகொண்டபொருளை உரியவரிடமே அளித்தல்.

இனிய சூதலரிடலுக்கு இசைந்த தேசமன்னரே
இனிய தாயப் பொருள்களை இயல்பினாற் கொடுத்துடன்,
தனையனும் மனை புகுந்து தாய் பொருட்கொடுத்தபின்
அணியரசன் ஆரமும் அவர்அவரக்கு அளித்தனன்.

புதிய மாளிகையில் நாககுமாரன் குடிபுகுதல்

மன்னவன்தன் ஏவலால் மாநகர்ப் புறத்தினில்
நன்னகர் சமைத்து இனிதின் நற்சுதன் இருக்கவென
நன்னகரின் நாமமும் அலங்கரியபுரமென்று
தன்னகரின் மேவும் பொற்றாரணிந்த காளையே
(நாககுமாரகாவியம் - இரண்டாம்சுருக்கம் பா- எண்கள் - 72,73)

(இரண்டாம் சுருக்கம் நிறைவடைந்தது)

மூன்றாம் சுருக்கம்

இடம்'. *காம்பீர நாடு*
உறுப்பினர் *அரசன் ஜெயவர்மன், துமசேனர், நாககுமாரன், திரிபுவனாரதி-வேடன், கீர்த்திவர்மன்.*

கவிக்கூற்று

அரிவையர் போகந் தன்னிலான நற்குமரன்தானும்
பிரிவின்றி விடாது புல்ப் பெருமலர்க்காவு சேர்ந்து
பிரிவுடன் இனிதின் ஆடிப் பாங்கினாற் செல்லும்நாளில்
உரிமையால் தோழர் வந்து சேர்ந்தது கூறலுற்றேன்.

குரல்'.1. நாககுமாரன் தன் தேவியர்களுடன் அலங்கரியபுரம் என்னும் அரண்மனையில் இன்பத்தை அனுபவித்து வந்தான். அதனோடு வனவிளையாட்டு, நீர்விளையாட்டு முதயவற்றையும் இனிதே மேற்கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்து வந்தான், அந்நாளில் ஊழின் வமையால் அவனிடம் தோழர்கள் வந்து சேர்ந்த வரலாற்றைக் கூறத் தொடங்குகிறேன்.

குரல்'.2. உலகல் மிகச் சிறந்த சூரசேனம் என்னும் அழகிய நாடு ஒன்று உள்ளது. ஒப்பற்ற கவின்மிகு வெற்றிக் கொடிகள் நாட்டிய வடிமதுரை என்ற நகரம் அந்நாட்டில் தலை நகரமாகும்.

குரல்'.1. அந்நாட்டினைச் ஜெயவர்மன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அம்மன்னன் மங்கையர்களுக்கு அழகில் மன்மதனைப் போன்றவனாவான். சிறப்பு மிக்க அம்மன்னின் கோப்பெருந்தேவி கற்புக்கரசியாகிய ஜெயவதி என்பவளாவாள்.

குரல்'.2. ஜெயவர்மன் தன் மனைவி ஜெயவதியுடன் ஐம்புரஇன்பங்களை முழுமையாக்த் துய்த்து மகிழ்ந்துவந்தான். அதன் பயனாக ஜெயவதிக்கு வியாளன், மாவியாளன் எனும் இரட்டைப் புதல்வர்கள் தோன்றினர்.

குரல்'.1. அவர்கள் பல்வகைக் கலைகளையும் கற்றுத் தேர்ந்து அரசர்க்கு உரிய சிறப்புடன் விளங்கினர். கோடி வீரர்களையும் எதிர்த்து வெற்றி காணும் ஆற்றலுடன் விலங்கியதால் கோடி படர்கள் என்ற சிறப்புப்பெயரும் பெற்றனர்.

குரல்'.2. அவ்வாறு வாழும் காலத்தில் ஒருநாள் அறிவொளிமிக்க அருந்தவமுனிவர் துமசேனர் என்பவர் அந்நகருக்கு வந்தருளினார். மன்னர் ஜெயவர்மன் அவர் காலடியில் வீழ்ந்து வணங்கினான், அவரது அறம் எனும் அமிழ்தம் பருகிய பின்னர், ஊழ் வினையால் அவரை வணங்கி ஒரு விண்ணப்பம் செய்தான்.

அரசன் ஜெயவர்மன்'. முனியரசே'.என்னுடைய புதல்வர்கள் இருவரும் இனி இந்த நாட்டை ஆட்சி செய்வார்களோ? அயலாருக்குச் சேவை

செய்வார்களோ? அறியேன்'. இரண்டில் ஒன்றைத் தாங்கள் விளக்கி அருளவேண்டும்.

முனிவர் தூமசேனர் புவிஅரசே'.நின் புதல்வர்கள் இருவரும் அரசாட்சி செய்ய மாட்டார்கள். ஒருவனிடத்தில் சேவை செய்வார்கள், இதனைச் சில அறிகுறிகளால் தெரிந்து கொள்ளலாம்.

அரசன் ஜெயவர்மன் (அதிர்ச்சியுடன்) முனிவரே'. யாது புகல்கிறீர்'. என்ன அறிகுறிகள் அவை?

முனிவர் தூமசேனர் எவனைக் கண்டதும் வியாளனுடன் பிறந்த நெற்றிக் கண் மறைகிறதோ அவனிடமே அவன் சேவை செய்வான், அதுபோல், மன்மதனைப் போன்ற மாவியாளனைப் பார்த்து "இவன் அழகற்றவன்" என்று எவள் இகழ்ச்சி செய்கிறாளோ அவளுடைய கணவனிடம் இவன் சேவை செய்வான்.

குரல்'.1. இதனைக் கேட்டபின் மன்னனும் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டு, வியாளனுக்கு முடிசூட்டிவிட்டு, மாவியாளனை இளவரசன் ஆக்கினான்.

குரல்'.2. அரசன் ஜெயவர்மன் அகப்புறப்பற்றுகளைத் துறந்து மகாமுனிவர் கோலம் கொண்டு காட்டில் தவம் நோற்கலானான், மக்கள் இருவரும் இனிதே அரசாளவில்லை.

குரல்'.1. அமைச்சன்மீது தங்களுக்கு உரிய அரசபாரத்தை ஒப்படைத்துவிட்டுத் தங்களுடைய சேவையை ஏற்றுக்கொள்ளும் இறைவனைத் தேடிச் சென்றனர். முடிவில் நாகலோகத்திற்கு ஒப்பான பாட புரம் நகரத்தை அடைந்தார்கள்

குரல்'.2. பாடபுர நகரின் அரசன் பெயர் சிரீவர்மன், அவனுடைய அரசமாதேவியின் பெயர் சிரீமதி, இவர்தம் புதல்வியின் பெயர் கேணிகா சுந்தரி, சிறப்புமிக்க அந்நகரின் வீதி வழியாக, தேவருலகத்தில் வாழுகின்ற தேவர்களைப் போன்று தோற்றமுடைய வியாளன், மாவியாளன் என்ற அரசகுமாரர்கள் இருவரும் நடந்து சென்றார்கள்.

குரல்'.1. இருவரும் அரண்மனைக்குச் சென்று மன்னன் சிரீவர்மனைக் கண்டு வணங்கனிர். அரசனும் அவர்களுக்கு நல்லாசிகூறி, இனிய ஆசனத்தில் அமரச் செய்து இனிமையாக அளவளவினான்.

குரல்'.2. பின்னர் தன் மகள் கேணிகா சுந்தரியை இளையோனாகிய மாவியாளனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். தன் தாதியின் மகள் இலனிதா சுந்தரியை மூத்தவனாகிய வியாளனுக்கும் திருமணம் செய்து கொடுத்தான், இருவரும் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

குரல்'.1. சிலநாட்கள் சென்றபின், வியாளன் மட்டும் தனியாக அந்நகரைவிட்டு வெளியில் வந்து, நாககுமாரன் வாழும் கனகபுரத்தை

அடைந்தான். அவ்வமயம், நாககுமாரன் யானை மீது நகருலாவந்து, தன் மாளிகையின் முன்பு வந்து இறங்கினான்.

குரல்'.2. நாககுமாரனைக் கண்டதும் வியாளனுடைய சிறுமலர் போன்ற நெற்றிக்கண் மறைந்துவிட்டது. அதனால் இவனே தன்னுடைய நாயகன் என்பதை உணர்ந்த வியாளன், நாககுமாரன் திருவடியைப் பணிந்து தன் வரலாற்றைக் கூறினான். நாககுமாரனும் மகிழ்ந்து அளவளாவினான்.

குரல்'.1. இவ்வாறு நடந்து கொண்டிருக்க, நாககுமாரனின் நகர்வலம் குறித்து நகரமக்கள் புகழ்ந்து பேசினர். அதனைக் கேட்ட சிரீதரனுடைய மனதில் பொறாமை உணர்வு மேலோங்கியது. இன்றே நாககுமாரனைக் கொல்வேன் என்று வஞ்சினம் கூறினான்.

குரல்'.2. ஐந்நூறு வீரர்களை அதன் பொருட்டு அனுப்பிவைத்தான். அவர்கள் விரைந்து வந்து நாக குமாரனின் அரண்மனையைச் சூழ்ந்து முற்றுகையிட்டனர், அவ்வமயம் அங்கிருந்த வியாழன் "நீவிர் விரைவில் போர்க்கோலம் கொள்ளக் காரணம் என்ன? என்று கேட்டான்.

குரல்'.1. அவர்கள் நாககுமாரனை அழிக்க வந்ததாகத் தெரிவித்தனர். அதனைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்ட வியாளன் அந்தநொடியில் அங்கிருந்த யானை கட்டும் கம்பம் ஒன்றைப் பெயர்த்து எடுத்து, அவ்வீரர்களை அடித்துத் துவைத்தான், அவர்கள் அனைவரும் தோற்று ஓடினர்.

குரல்'.2. தன்னுடைய படை வீரர்கள் தோற்றோடியதை அறிந்த சிரீதரன் சீற்றறங் கொண்டான். தானே போர்க்கோலம் கொண்டு நாக குமாரனைத் தன்னுடன் போர் செய்யவருமாறு அறைகூவல்விடுத்தான், நாக குமாரனும் யானை மீதேறிச் சென்று போர் செய்யத் தொடங்கினான்.

குரல்'.1. அச்செய்தியை அறிந்த சயந்தர மன்னன், தன்னுடைய அமைச்சன் நயந்தரனை அனுப்பிச் சமாதானம் செய்யுமாறு கூறினான். அமைச்சனும் நேரில் சென்று குமாரர்கள் இருவரிடமும் பேசிப் போரை நிறுத்தினான். கொலைத் தொழில் ஒழிந்து அமைதி நிலவியது.

குரல்'.2. நாககுமாரனிடம், வியாளனால் படை அழிந்த கோபத்தில் சிரீதரன் போருக்குவந்தான். நீ அவனுடன் போர் செய்தல் முறையன்று. நீவிர் இருவரும் ஒரே நகரத்தில் வாழ்ந்தால் உமது பகையுணர்வு ஒழியாது. எனவே நீ இன்றே வேற்று நாட்டுக்குச் செல்ல வேண்டும், இது எனது வார்த்தைகள் அல்ல. நின் தந்தை கூறிய சொற்களாகும் என்றான் நயந்தரன்.

குரல்'.1. அதனைக் கேட்ட நாககுமாரன்,"அமைச்சரே சிரீதரன் இன்னும் போகவில்லை, போர் கருதி நிற்கின்றான் போலும், அவன் முதல் தன் மனைக்குச் சென்றால் நானும் செல்வேன்" என்று பதில் உரைத்தான்.

குரல்'.2. அமைச்சர் நயந்தரன் சிரீதரனைப் பார்த்து, "அரசே, நீ அறிவில்லாதவனாக அல்லவா இருக்கிறாய். உன்படைவீரர்களால்

ஒருவனை வெற்றி கொள்ள முடியவில்லை. அவன் ஒருவன் வமையினால் உன் படைவீரர்கள் யாவரும் தோற்றோடினர். அந்நாககுமாரனே வெற்றி பெற்றுள்ளான், அதனை அறியும் நுண்ணறிவு உனக்கு இல்லை. அதனால் போரை விரும்புகின்றாய், அவ்வாறு போரிட்டால் நீ அழிந்து போவாய், எனவே உன் அரண்மனைக்குச் செல் என்றான். அவனும் தன் மாளிகையைச் சென்றடைந்தான்.

குரல்'.1. அமைச்சர் நயந்தரன் கூறிய தந்தையின் கட்டளையை ஏற்றுக் கொண்ட நாககுமாரன் தன் அரண்மனைக்குச் சென்று தன்தாயைக் கண்டான், அவளிடம் இந்த நகரைவிட்டு வேறு நகருக்குச் செல்ல வேண்டும் என்று அமைச்சர் மூலம் தந்தை கட்டளை இட்டுள்ளார் என்றான்

குரல்'.2. தாயிடம் விவரம் தெரிவித்துவிட்டு தன் தேவியரை அழைத்துக் கொண்டு யானை மீதேறி வியாளனுடைய நகரமாகிய மதுரையைச் சென்றடைந்தான். அங்கு தேவதத்தை என்னும் பெண்ணின் இல்லத்தில் தங்கி எல்லையற்ற மகிழ்ச்சியுடன் உறை வாராயினர்.

குரல்'.1. நாககுமாரனும் வியாளனும் அவனுடைய நண்பனாகிய துட்டவாக்கியனும் ஆகிய மூவரும் ஒன்றாகச் சென்று நகர்ப்புறத்தே விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வரியாக அப்போது யாழிசையில் வல்லமை பெற்ற ஐந்நூறு இளைஞர்கள் வந்து கொண்டிருந்தனர்.

நாககுமாரன்'. அடடே............. கையில் யாழுடன் இளைஞர் கூட்டம் ஒன்று வருகிறது. இளைஞர்களே நீங்கள் எல்லாம் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்? எங்கு செல்கின்றீர்கள்?

கீர்த்திவர்மன்'. நான் இவர்களுக்கெல்லாம் தலைவன் என்பெயர் கீர்த்திவர்மன். இவர்கள் அனைவரும் என்னிடம் வீணை கற்றுக் கொள்கின்றனர்,

நாககுமாரன்'. அப்படியா', இவ்வளவு வீணைக் கலைஞர்களும் ஒன்று சேர்ந்துகாண்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. நீங்கள்............

கீர்த்திவர்மன்'. அனைத்தையும் கூறுகிறேன். கேளுங்கள். காம்பீர நாடு என்று ஒருநாடு உண்டு. அதன் தலைநகரமான காம்பீரத்தின் அரசன் பெயர் நந்தன், அவன் தேவியின் பெயர் தாரணி என்பது.

நாககுமாரன்'. அதற்கும் நீங்கள் கூட்டமாகச் செல்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ஐயா?

கீர்த்திவர்மன்'. இருக்கிறதே'. கூறுகிறேன் கேளும், அவர்களின் அழகுமிக்க மகள் திரிபுவனாரதி, நாங்கள் அனைவரும் அவளின் சுயம்வரத்திற்குச் சென்று, வீணைப்போட்டியில் அவளிடம் தோற்றுவிட்டோம்.

நாககுமாரன்'. என்ன வீணைப்போட்டி............ தோற்றுவிட்டோம் வெட்கம் திரிபுவனா ரதியாம்...... அவள் எத்தனை லோகங்களுக்கு வேண்டுமானலும் ரதியாக இருந்துவிட்டு போகட்டும். ஆற்றல் ஆணைவிட மேலானவளா?

கீர்த்திவர்மன்’. என்ன செய்வது. சிலபோது மகளிர் ஆண்களை விட அதிக ஆற்றல் பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர். எனவேதான் அதனை ஏற்றுக் கொண்டு எங்கள் ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறோம்.

நாககுமாரன்’. நீங்கள் வேண்டுமானால் ஏற்றுக்கொண்டு தலைகுனிந்து வீடுதிரும்புங்கள், அந்த காம்பீர நகரம் செல்கிறேன். அவளை வீணையில் வெல்கிறேன். வியாளா நீ என்னுடன் வா’. துட்டவாக்கியா நீ இங்கிருந்து பார்த்துக்கொள்’.

குரல்’.2. காம்பீர நகர் சென்ற நாககுமாரன் அங்கு வீணைப் போட்டியில் திரிபுவனா ரதியை வெற்றிகொண்டு அவளைச் சுயம்வரத்திலும் வென்றான், அவளை மணமுடித்து அவளோடு இன்பமாக வாழ்ந்துவந்தான்.

குரல்’.1. அப்போது வேற்றுநாட்டு வணிகன் ஒருவன் அந்நகருக்குவந்தான், அவனிடம் சென்று வந்த நாடுகளில் ஏதேனும் அதிசய நிகழ்வு ஏதேனும் உண்டா? என வினவினான்.

குரல்’.2. அவ்வணிகன், இரம்மியகம் என்ற காட்டில் திரிசங்கம் என்னும் மலைமேல் பூமிதிலகம் என்ற பெயருடைய ஜீனாலயம் ஒன்று உள்ளது. நாள்தோறும் ஒளிமிக்க கதிரவனின் கதிர்கள் உச்சிக்கு வரும் நண்பகல் நேரத்தில், ஒருவன் அந்த ஆலயத்தின் முன் வந்து நின்று கொண்டு கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கிறான். அதற்கான காரணம் இன்னதென அறியக் கூடவில்லை என்றான்.

குரல்’.1. நாககுமாரன் அவ்வணிகன் கூறிய செய்திகேட்டு அந்த நிகழ்ச்சியைத் தானும் காணவிரும்பி ஜீனாலயம் சென்றான். அருகனைப் பணிந்து துதிப்பாடல்களால் தொழுது வணங்கினான். அங்குள்ள முன் மண்டபத்தில் அமர்ந்து கூக்குரல் இடும் இளைஞனின் வருகைக்காக காத்திருந்தான்.

<u>வணிகன் கூறிய செய்தி</u>

தீதில் பூந்திலகம் என்னும் சினாலயம்
அதனின் முன்னிற் சோதிமிக் கிரணந்
தோன்றுஞ் சூரியனுச்சிக் காலம் ஓதியகுரலனாகி
ஒருவன் நின்று அலறுகின்றான் ஏதுவென்று
அறியேன் என்றான் எரிமணிக்கடக்கையான்.*(பா.எ - 91)*

<u>நாககுமாரன் ஜீனாலயம் சென்று தங்குதல்</u>

குன்றெனத் திரண்ட தோளான் குமரனுங் கேட்டு வந்து
சென்றந்த ஆலயத்திற் சினவரன் பணிந்து நின்று
வென்றுஅந்த விமலன் மீது விரவிய துதிகள் சொல்
முன்னந்த மண்டபத்தின் முக மலர்ந்து இனிது இருந்தான்
(நாககுமாரகாவியம் - மூன்றாம்சுருக்கம் - பா - 92)

குரல்'.2. நண்பகல் நேரத்தில் ஒருவன் வந்து ஆலயத்தின் முன்னர் நின்று கொண்டு "ஓ" வெனக் கூக்குரல் இட்டு அலறினான். அவனிடம் நாககுமாரன் காரணம் யாதெனக் கேட்டான்.

குரல்'.1. அவனும் தனது காதயை பீமன் என்ற அசுரன் கவர்ந்து கொண்டு யாரும் நெருங்க முடியாத பயங்கரமான மலையில் உள்ள இருள் நிறைந்த குகையில் சிறை வைத்திருப்பதாகக் கூறினான்.

குரல்'.2. தனது பெயர் இரம்மிய வேடன் என்றும் இந்த இரம்மிய வனத்துள் வாழ்வதாகவும் கூறினான். அவனது துன்பத்தைப் போக்குவதாக உறுதியளித்து அந்தக் குகை உள்ள இடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு வேண்டினான்.

குரல்'.1. வேடனும் உடனே அழைத்துச் சென்று அக்குகையைச் சுட்டிக்காட்டினான், நாககுமாரன் அச்சம் சிறிதுமின்றி அக்குகை வாயின் முன் நின்றான்.

குரல்'.2. குகையில் இருந்த வியந்தர தேவன் வெளியே வந்து நாககுமாரன் பாதங்களை வணங்கினான். ஒருஞானியிடம் தருமம் கேட்கும் சமயத்தில்என்னிடம் உள்ள பொருட்களுக்கு உரியவர் யார் எனக் கேட்டேன். அப்போது அவர் வேடன் கூக்குரல் கேட்டுக் பரிந்து வரும் ஆடவனுக்கு அவை உரியது என்றார். எனவே தான் அவன் மனைவியைக் கவர்ந்து வந்தேன். தாங்கள் பரிந்துரைத்து வந்ததால் அவளை விட்டுவிடுகிறேன். இதோ சந்திரகாந்தம் என்ற வாள், நாக சயணம் என்ற படு்கை காம கரண்டகம் என்ற செப்புச் சிமிழ் எனும் இவை தங்களுடையவை. பெற்றுக் கொள்ளுங்கள் என்று வழங்கினான்.

குரல்'.1. அவற்றைப்பெற்றுக் கொண்ட நாககுமாரன் அவ்வேடனை நோக்கி இம்மலையில் வேறு ஏதேனும் அதிசயம் இருக்கிறதா? எனக் கேட்டான். வேடனும் இம்மலையின் அடிவாரத்தில் இரணியக் குகை உள்ளது. என்று கூறி அதனைக் காட்டினான். நாககுமாரனும் அங்கு சென்றான்.

குரல்'.2. அக்குகையில் உள்ள சுதர்சனை என்ற இயக்கி வந்து அவன் பாதங்களைப் பணிந்தாள். வெள்ளியம் பெருமலையின் தென்பகுதியில் உள்ள அலகாபுரி நகரின் அரசர் "ஜீதசத்துரு" என்பவர் பன்னீராண்டுகள் கடுந்தவம் செய்து எங்கள் நாலாயிரம் பேரை ஏவலர்களாகப் பெற்றார்.

குரல்'.1. அப்போது முரசொ ஒன்று கேட்டது. அந்த ஒ எங்கிருந்து வருகிறது என்பதை அறிய எங்களில் ஒருத்தி அவலோசனி என்ற வித்தையை ஓத அதன்மூலம் அம்முரசொ வந்த திசை அறியப்பட்டது.

குரல்'.2. அம்முரசொ முனிசுவிரதரின் கேவல ஞான கல்யாணத்தில் தேவர்களால் முழங்கப்பட்டது என்பதை அறிந்து கொண்டு அங்குச் சென்று அறவுரை கேட்டு, வாழ்க்கையில் வைராக்கியம் மேற்கொண்டு துறவு வேண்டினார்.

குரல்’.1. அப்போது நாங்கள் அவரிடம் சென்று தாங்கள் பெருந்தவம் செய்து எங்களைப் பெற்றதும், பின்னர் எங்கள் ஏவல் ஏற்றுக் கொள்ளாமல் துறவு மேற்கொள்வதும் எந்த வகையில் நியாயம், நாங்கள் இனி யாருக்கு ஏவல் செய்ய வேண்டும் என்று கேட்டோம்.

குரல்’.2. அவரும் இயக்கிகளே’. இனிவரும் எதிர்காலத்தில் நேமிதீர்த்தங்கரர் காலத்தில் நாக குமாரன் எனும் அரசகுமாரன் இங்கு வருவான். அவனுக்கு ஏவல் செய்யுங்கள் என்று கட்டளையிட்டுச் சென்றார் என்று இயக்கி கூறினாள்.

குரல்’.1. மேலும் அவள் நாங்கள் நாலாயரி வரும் இனி உனக்கு அடிமையானோம். ஆதலால் எங்களை ஏவலாளாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றாள். அதற்கு நாககுமாரன் “தெய்வங்களே’. நீங்கள் யாவரும் இங்கேயே இருங்கள். நான் வேண்டுங்காலத்தில் வாருங்கள் என்று கட்டளையிட்டுவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டான்.

குரல்’.2. மீண்டும் அவ்வேடனை நோக்கி இன்னும் அதிசயம் ஏதனும் உண்டோ எனக் கேட்டான். அவனும் அதோ வேதாளம் ஒன்று கையில் வாளேந்திச் சுழன்று கொண்டிருப்பதைப் பாருங்கள். அதன் அருகில் செல்வோர் யாரும் இல்லை” என்று கூறினான்.

குரல்’.1. நாககுமாரன் உடனே சென்று வேதாளத்தின் காலைப் பற்றி இழுத்துப் பிளந்து தள்ளினான், பிறகு, இந்த வேதாளத்தை வென்றவருக்கு இந்நிதிக் குவியல் உரியதாகும் என்ற சாசனத்தைக் கண்டான்.

குரல்’.2. உடனே முன்னர் உதவிக்கு வந்த இயக்கியரை மனதால் நினைத்தான், அவர்கள் நாலாயிரவரும் வந்து வணங்கி நின்றனர், அவர்களை நிதிக்குவியலுக்கு காவலாக வைத்து விட்டு அருகன் ஆலயம் சென்று தொழுது நின்றான்.

குரல்’.1. பிறகு மனைவி திரிபுவனாரதியுடனும் தோழனுடனும் சென்று கிரிகூடபுரம்என்ற நகரத்தை அடைந்து ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்தான்.

குரல்’.2. நாககுமாரனைத் தெரிந்துகொண்ட கிரிகூடபுரம் அரசனான வனராஜன் தனது மனைவி வனமாலையுடன் வந்து தனது மகள் கணைவிழி என்னும் அழகிய கன்னிகையை அவனுக்கு வேள்வி விதிகளின்படித் திருமணம் செய்து கொடுத்தான்.

குரல்’.1. இவ்வாறு நாட்கள் கழிகையில் ஒரு நாள் நகரின் புறத்தே உள்ள அழகிய சோலைக்கு ஜயர், விஜயர் என்ற சாரணர் இருவர் வந்தனர். இச்செய்தியை அறிந்த நாககுமாரன் விரைந்து சென்று இருவரையும் வணங்கனரின் வனராசனின் குலவரலாறு கூறுமாறு கேட்டான்.

குரல்’.2. அவர்களும்,“இந்த புண்டரத்தின் அரசன் அபராஜிதன், அவன் தேவியர் சத்திவதி, சுந்தரி என்று இருவர், அவர்களின் பிள்ளைகள் முறையே

பீமன், மகாபீமன் என இருவர், அபராஜிதன் பீமனுக்கு நாட்டை வழங்கிவிட்டு நற்கதி அடைந்தான், பீமன், மகா பீமனால் துரத்தப்பட்டு இந்நகரை வந்து அடைந்தான்.

குரல்’.1. மகாபீமனின் மகன் பீமாங்கன். அவனுடைய மகன் சோமப்பிரபன், பீமனின் பேரன் தற்போது ஆட்சி செய்யும் வனராஜன் என்று கூறினர். அதனைக் கேட்டு மகிழ்ந்த நாககுமாரன் சாசனப்படி புண்டரபுரத்தை வனராஜனுக்கு ஆக்குமாறும் வியாளன் சோமப்பிரபனைத் தோற்கடிக்க உரிமை வேண்டும் என்றும் கூறினான்.

குரல்’.2. அதனைக்கேள்வியுற்ற சோமப்பிரபன் யுத்த பூமியில் நாட்டைப் பெறட்டும் என்றான். வியாளன் சோமப்பிரபனைத் தோற்கடித்து அவனைக் கட்டிக் கொண்டு வந்து நாககுமரன் முன் நிறுத்தினான், நாககுமாரன் சோமப்பிரபனை விடுவித்து வனராசனுக்கு நாட்டை வழங்கி முடிசூட்டினான்.

குரல்’.1. சோமன் வைராக்கியம் கொண்டு எமதரர் எனும் முனிவரை வணங்கி நல்லாசி பெற்றான், பின்னர் பல்லுயிரையும் பாதுகாக்கும் மகாவிரதம் மேற்கொண்டு நற்றவம் மேற்கொண்டான்.

சொல்தகு நாடிழந்த சோமநற்பிரபன் போகி
எல்லையிற் குணத்தின் மிக்க எமதரர் அடிவணங்கி
நல்லரும் சுரந்தளிக்கும் நற்றவமுனிவனாகி
ஒல்லையின் வினைகள் தீர யோகத்தைக் காத்து நின்றான்

நாககுமார காவியம் - மூன்றாம் சுருக்கம்
- பா.எண் - 101

(மூன்றாம் சுருக்கம் முற்றும்)

நான்காம் சுருக்கம்

இடம்: கங்கநாடு - ஜினாலயம்
உறுப்பினர்: நாககுமாரன், முனிபுங்கர்

குரல்.1. சுப்பிரதிட்டம் என்னும் சிறப்புமிக்க நகரை ஆட்சிசெய்பவன் ஜெயவர்மன் என்பவன், அவனது தேவி சித்திரப்பாவை போன்ற ஜெயவதி ஆவாள்.

குரல்.2. இவர்தம் மக்களான அசேத்தியர், அபேத்தியர் என்ற இருவரும் சீரும் சிறப்பும் மிகுந்த செல்வமும் பெற்று வாழ்ந்து வந்தனர்,

குரல்.1. அந்நாளில் நகரின் புறத்தை உள்ள சோலையில் உண்ணாநோன்பிருந்து குணங்களால் உயர்ந்த பிஹிதாஸ்வர முனிவர் வந்து தங்கி அறவுரை வழங்கினார். மன்னன் ஜெயவர்மன் சென்று முனிவரின் திருவடிகளை வணங்கி ஆசி வேண்டினான்.

குரல்.2. முனிவரிடம் தன் குமாரர்கள் இருவரும் சேதிக்க பேதிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் இருவரும் சுதந்திரமாக என் நாட்டை ஆள்வார்களா என்பதைத் தங்கள் திருவுள்ளத்தால் நன்கு ஆராய்ந்து கூறுவீர்களாக'.

குரல். 1. முனிவரும், " புண்டரிபுரத்தின் மன்னனாகிய சோமப் பிரபனை வெற்றி கொண்டு நாட்டினை வனராசனுக்கு வழங்கக்கூடிய ஆற்றல் பெற்றவன் ஒருவன் வருவான், அவனே இவர்கள் இருவருக்கும் தலைவன், இவர்கள் இருவரும் அவனைக் கண்டு வணங்கி அவனுக்கு ஏவல் செய்து திகழ்வார்கள்" என இன்னுரை வழங்கினார்.

குரல்.2. மன்னன் ஜெயவர்மன் தன் மக்களிடம் அரசாட்சியை வழங்கிவிட்டுத் துறவு மேற்கொண்டான், பிள்ளைகள் இருவரும் அரசாட்சி செய்து வரும நாளில்.

குரல்.1. நாககுமாரன் புண்டரவர்த்தனபுரத்தில் சோமப்பிரபனை விடுதலை செய்த பின் துறவு மேற்கொண்டான் சோமப்பிரபன். அவன் துறவியாகி சிறந்த முனிவராகி முனிவர் பலருடன் சேர்ந்து புகழ்மிக்க சுப்பிரதிட்ட நகரத்தின் எழில் மிக்க சோலையில் தங்கியிருந்தார்.

குரல்.2. ஜெயவர்மனின் புதல்வர்கள் இருவரும் அத்துறவியைக் கண்டு வணங்கினர். பின் துறவு மேற்கொண்ட காரணத்தைக் கேட்டனர், அதற்கு அத்துறவி சயந்தரமன்னனின் மகன் நாககுமாரனின் சீற்றத்தால் துறவு மேற்கொண்டதாகக் கூறினார். உடன் நாக குமாரனின் பெருமையும் விளக்கினார்.

குரல்’.1. முனிவரின் உரையைக் கேட்ட அவர்கள் இருவரும் அரசாட்சியை அமைச்சனிடம் ஒப்படைத்துவிட்டு நாககுமாரனைக் கண்டு வணங்கினர். இன்று முதல் தாங்கள் சேவகம் கொள்ள இருவரும் ஏவலாளாக வந்தோம் என்றனர்.

குரல் 2. நாககுமாரன் காரணம் கேட்கத் தங்கள் வரலாற்றைக் கூறினார், குமாரனும் மனம் மகிழ்ந்து அவர்களை அழைத்துக் கொண்டு வந்து ஜாலத்தகம் என்றவனத்திற்குச் சென்று ஆலமரநிழல் அமர்ந்தான்.

குரல் 1. அம்மரத்தின் அடியில் நல்வினைமிக்க நாககுமாரன் தங்கிஇருந்த போது அதன் நிழல் கதிரவன் ஒளியால் மாறுபாடு அடையாது நிலையாக இருந்து வாகை மாலை சூடிய நாககுமாரனுக்கு நறுநிழல் தந்தது.

குரல் 2. அம்மரத்தின் நச்சுக் கனிகள் அனைத்தும் அமுதக் கனிகளாக மாறின. ஜெயவர்மனின் புதல்வர்களான அசேத்தியனும், அபேத்தியனும் அப்பழங்களைத் தின்று நலமுடன் இருந்தனர்.

குரல் 1. நாககுமாரன் அச்சோலையில் தங்கி இருந்தபோது ஐந்நூறு பேர்கள் வந்து அவனை வணங்கினர். குமரன் விவரம் கேட்டபொழுது, நாங்கள் அருந்தவமுனிவர் ஒருவரிடம் எங்களது புகடம் யாதெனக் கேட்டோம்.

குரல் 2. அவரும் ஜாலந்தக வனத்து நச்சு மரக்கனிகள் யாருக்கு அமுதக் கனிகளாக மாறி இன்பம் தருமோ, மேலும் மாறாத தன்னிழல் தருமோ அவரே உங்கள் தலைவர் என்று கூறினார்,

குரல் 1. அவர் கூறிய உரையைக் கேட்டு இதுநாள் வரையில் தங்கள் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தோம். இனி உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியக் காத்திருக்கிறோம், எங்கள் தலைவன் நீயே என்றனர்.

குரல் 2. ஐநூற்றுவர் கூறிய நல்லுரைகளைக் கேட்ட நாககுமாரன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான். தோழர்களே’. உங்கள் விருப்பம் போல ஆகட்டும் என்று கூறி அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு கிரிநகர் நோக்கிச் சென்றான்.

குரல் 1. நாககுமாரன் வரும் செய்தியை அறிந்த கிரிநகர் அரசன் அரிவரன் அவனை எதிர்கொண்டு அழைத்துகு சென்றான். அவனது விருந்தினனாக அரண்மனையில் தங்கினான்.

அடிமரத்திருப்ப அண்ணல் அந்நிழல் திரிதன்றிக்
கடிகமழ் மார்பன் தன்னைக் காத்து உடன்
இருப்பப் பின்னும் விடமரப் பழங்கள்
எல்லாம் வியந்து நற்றுய்த்திருந்தார்
கொடிமலர்க் காவு தன்னுட் கோமகன் இருந்த போழ்தில்.
அஞ்சு நூற்றுவர்கள் வந்தே அடிபணிந்தினிய
கூறும் தஞ்சமா எங்கட்கு எல்லாம்

**தவமுனிகுறியுரைப்ப புஞ்சிய வனத்திருந்தோம் புரவல
நின்னிடத்தின் நெஞ்சினிற்குறியன் காணா எமக்கு நீ
இறைவனென்றார்.**

(நாககுமாரகாவியம் - நான்காம் சுருக்கம் பா.எ.110. 111)

குரல் 2. அரிவரன் மனைவி மிருகலோசனை என்பவள். இவர்தம் புதல்வி நற்குணம் மிக்க குணவதி என்பவள் ஆவாள். அவளின் அழகில் மயங்கிய சிந்து தேசத்தின் அதிபதி பிரத்தியோதனன் பலவீரர்களுடன் வந்து கிரிநகர் கோட்டையை சுற்றி வளைத்து முற்றுகை இட்டான்.

குரல் 1. இச்செய்தியைக் கேள்விப்பட்ட நாககுமாரன் தன்னுடைய படைகளுடன் சென்று போர்க்களத்தில் கோபத்துடன் கடும் போர் செய்து பகைவனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான்.

குரல் 2. கிரிநகர் மக்களின் உயிர்ப்பயம் பொருட்பயம் நீக்கி வெற்றிக் களிப்புடன் யானை மீதேறி முரசுகள் முழங்க நகரை அடைந்தான்.

குரல் 1. புரவலன் அரிவரன் அளவற்ற மகிழ்ச்சியுடன் தன் மகள் குணவதியை வேள்வி முறைப்படி நாககுமாரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

குரல் 2. மன்மதனும் ரதியும் போன்று நாககுமாரனும் குணவதியும் காமநூல் விதிப்படி போக உபபோகங்களை நுகர்ந்து இன்பம் எய்தினர்

குரல் 1. ஊடலும் கூடலும் காம இன்பத்தை நிலைபெறச் செய்துவரும் நாளில், சோர்வு என்பது சிறிதும் இல்லாத நாககுமாரன் சயந்தகிரி என்னும் ஊரைச் சென்றடைந்தான்.

குரல் 2. வெற்றிமாலை அணிந்த மார்பனாகிய நாககுமாரன், நேமி தீர்த்தங்கர பகவான் ஜினாலயத்தை மூன்று முறை வலம் செய்து ஆலயத்தின் உள்ளே சென்றான்.

குரல் 1. பகவானை வணங்கி, முக்குடைக் கீழ்சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மூவுலக நாதனாகிய வாமனர் மூது பலதுதிப்பாடல்களைச் சொல் வாழ்த்தத் தொடங்கினான்.

குரல் 2. முத்துமணி மாலைகளால் அழகு செய்யப்பட்ட முக்குடையின் கீழ் வீற்றிருக்கும் தீர்த்தங்கள் என்ற ஜினபகவானின் செம்மையான திருவடிகளைப் பணிந்து வணங்குபவர்கள் சிறப்புப் பெறுவர்

குரல் 1. தேவர்கள் உலகில் பிறந்து தேவ இன்பம் நுகர்ந்து ஆயுள் முடிவில் இம் மண்ணுலகில் சக்கரவர்த்திகளாகப் பிறந்து ஆட்சி செய்வார்கள், மேலும் வெற்றி யானையின் கழுத்தின் மீது அமர்ந்து வெண்கொற்றக் குடையின் நிழல் நீங்கா இன்பத்துடன் வாழ்வார்கள்.

குரல் 2. சமவ சரணத்தில் தேவர்களால் இயற்றப்பட்ட பொற்றாமரை மலரின் மீது வீற்றிருக்கின்ற, நற்காட்சி நாயகன் தீர்த்தங்கர பரம தேவன்.

அவரது திவ்யத்திருவடியை அன்புடன் பணிந்து வணங்குபவர்கள் தேவருலகில் சென்று இந்திரனாகப் பிறப்பார்கள். தேவர்கள் அனைவரும் தொழுது ஏவல் செய்யுமாறு இன்பத்துடன் வீற்றிருப்பார்கள்.

குரல் 1. இவ்வாறு இணையற்ற இறைவன் திருவடிகளைப் பணிந்து வணங்கிய நாககுமாரன், தன் உற்ற நண்பர்களுடன் இனிதே வீற்றிருந்தான்.

குரல் 2. அப்போது வில்லும் கணையும் கைகளில் ஏந்தியபடி ஒருவன் வந்து பணிவுடன் வணங்கி ஓர் ஓலையை எதிரில் வைத்து விட்டு இருகைகளையும் தலைமேல் குவித்து வணங்கியபடி கூறத் தொடங்கினான்.

தூதுவன் நற்றிறம் மிக்க நாககுமாரர்க்கு வணக்கம். வத்சை என்னும் நாட்டின் வான்புகழும் தலைநகரம் கௌசாம்பி அதனை சுபசந்திரன் என்னும் வேந்தன் ஆண்டுவருகிறான், அவனுடைய தேவி சுகாவதி எனும் நற்பெயருடையவள். அவர்களுடைய புத்திரிகள் ஏழு பேர்களாவர்.

நாககுமாரன் என்ன ஏழுபுத்திரிகளா? சப்த கன்னியர் என்பார்களே? அவர்கள் இவர்கள் தானோ?

தூதுவன் சுயம்பிரபை, சுப்பிரபை, நற்பிரபை, கனகமாலை, நங்கை, நற்பதுமை, நாக தத்தை என்பது அவர்களது பெயர்களாகும்.

நாககுமாரன் நல்ல நல்ல பெயர்கள், சரி அவர்கள் தற்போது எங்குள்ளனர்?

தூதுவன் அவர்கள் இனிதே வாழ்ந்து வரும் நாளில் வெள்ளியம் பெருமலையில் தென்சேடியில் உள்ள இரத்தின சஞ்சயபுரத்தின் அரசன் சுகண்டன் தன் பகைவன் மேகவாகனனால் துரத்தப்பட்டு கௌசாம்பி நகரின் அருகில் உள்ள துல்லங்கிபுரம் என்ற நகரை ஆண்டுவந்தான்.

நாககுமாரன் அவனுக்கும் இந்த ஏழு பருவமங்கையருக்கும் என்ன சம்பந்தம்?

தூதுவன் உள்ளது அரசே’. அவன் சுபசந்திர மன்னனின் அவ்ஏழு கன்னியரையும் தனக்கு மணம் செய்து தருமாறு வேண்டினான்

நாககுமாரன் மன்னன் மணமுடித்துத் தந்தானா?

தூதுவன் மன்னன் சுபசந்திரன் மறுத்ததால் அவனைக் கொன்று விட்டு ஏழு கன்னியரையும் சிறையில் அடைத்து விட்டான்.

நாககுமாரன் என்ன ஆணவம் இது?

தூதுவன் சிறையில் அடைக்கப்பட்ட ஏழுவரில் நாகதத்தை தப்பித்து வந்து தன் தந்தையின் உடன் பிறந்தவனான அத்தனாபுரத்து அரசனிடம் இச்செய்தியைக் கூறினாள். அதனை ஏற்று, உன் திறம் அறிந்த சுபசந்திரனின் இளையவன் அப்பெண்டிரின் சிறிய தந்தை உன்னைத் துணையாக வருமாறு ஓலை அனுப்பியுள்ளான். அதனைத்தான் நான் உங்கள் முன் வைத்துள்ளான்.

நாககுமாரன் (ஓலைஎடுத்துப் பார்த்து) ஓ............ சுபசந்திர மன்னனின் இளவல் அபிசந்திரன் நம் துணை வேண்டுகிறாரா? அதுவும் ஏழுகன்னியரின் உயிரும், மானமும் காக்க வேண்டிய கடப்பாடு வேறு சேர்ந்து கொள்கிறது. சரி நமக்கு இதெல்லாம் சாதாரண காரியங்கள் போலத்தான், உடன் வருகிறேன்'. தூதுவரே......... கிளம்பட்டும் படைகள்.........

(படைக்கலங்கள், முழங்கும் ஓ, வீரர்கள் பொருதும் குறிப்புகள்)

குரல் 1. நாககுமாரன் தன் வித்தைகளைத் துணையாகக் கொண்டு கௌசாம்பியை அடைந்து சுகண்டனுக்குத் தூது விடுத்தான். அவன் கன்னியர்களை விடுதலை செய்ய மறுத்துவிட்டுப் போருக்கு வெகுண்டுவந்தான்.

குரல் 2. நாககுமாரனும் அவனை எதிர்த்துப் பெரும்போர்செய்து "சந்திரஹாசம் " என்ற வாளினால் சுகண்டனைக் கொன்றான், சுகண்டன் மகன் வச்சிரகர்ணன். நாககுமாரனிடம் சரணடைந்தான்.

குரல் 1. பின்னர் இரத்தின சஞ்சய புரத்தைக் கவர்ந்த மேகவாகனனைப் போரில் கொல்வித்து, வச்சிர கர்ணனுக்கு முடிசூட்டி அரசனாக்கினான். அதனையடுத்து அபிசந்திர மன்னனுடைய அத்தினாபுரம் நகரை அடைந்தான்.

குரல் 2. ஒரு மங்கள நன்னாளில் அபிசந்திரன் புதல்வி சந்திரப்பிரபையையும், சுபசந்திரன் புதல்விகள் எழுவரையும் சுகண்டன் புதல்விகள் அனுஜை, உருக்கு மணி ஆகியோரையும் வேள்விமுறைப்படி மணம் செய்து கொண்டு இன்புற்று வாழ்ந்திருந்தான்.

நங்கையர் பலரை மணம் செய்தல்

அபிசந்திரன் தன் அன்புரமத்தினாகம் ஏகியே
சுபகூர்த்த நற்றினஞ் சுபசந்திரன் சுதைகளும்
அபிசந்திரன் தன் மகளாம் சுகண்டன் சுதையுடன்
செப மந்திர வேள்வியான் செல்வன் எய்தி
இன்புற்றான்.

(நாககுமார காவியம் - நான்காம் சுருக்கம் - பா. எண் -126)

குரல்'.1 இவ்வாறு மணம் செய்து கொண்டு நங்கையருடன் நாககுமாரன் இங்கிதச் சேட்டையாடும் காமக் களியாட்டத்தில் மூழ்கி இருந்தான். ஒருநாள், அந்நகரின் புறத்தே இருக்கும் பூஞ்சோலையில் வனவிளையாட்டில் இன்புறும் நாளில்.............

குரல் 2. அவந்தி என்ற பெரிய நாட்டின் தலைநகரம் உஞ்சை. அந்நகரின் மன்னன் ஜெயசேனன். அவனது பட்டத்து தேவி ஜெயஸ்ரீ. இவர்களது மகள் சிறப்பு மிகு மேனகி என்பவளாவாள்,

குரல் 1. இவர்களது உஞ்சை நகருக்கு, பாடபுரத்தில் இருந்த பண்புடைய மாவியாளன் என்பவன் மேனகியின் மீது விருப்பங்கொண்டு வந்து தங்கினான்.

இதனை அறிந்த தோழி மேனகிக்குச் செய்தியைக் கூறினாள். மேனகியும் அவனைவந்து பார்த்துவிட்டு விருப்பம் இல்லாமையால் தன் கன்னிமாடத்தைச் சென்றடைந்தாள்.

குரல் 2. உஞ்சை நகரை விட்டுப் புறப்பட்டுச் சென்ற மாவியாளன் தன் தமையன் வியாளனைக் கண்டு அவன் பாதங்களை வணங்கினான். பின்னர் நாக குமாரனையும் சென்று வணங்கனான்.

குரல் 1. யாரென நாக குமாரன் வினவ வியாளன் தன் தம்பி என்று கூறினான். உடன் நாககுமாரனிடம் உஞ்சை நகரில் மேனகி எனும் மன்மதனும் விரும்பும் அழகி இருக்கிறாள் என்றான்.

குரல் 2. நாககுமாரன் உஞ்சை நகர்நோக்கிச் சென்றான், அவனை ஜெய சேனன் அளவற்ற மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு அழைத்துச் சென்றான்.

குரல் 1. நாககுமாரனே நேரில் வந்ததால் மகிழ்ந்த ஜெயசேனன் வேள்விவிதிப்படி நன் முகூர்த்த நாளில் மேனகியை மங்கையர் ஏந்திய கலச தாரை வார்தணுத் திருமணம் செய்து கொடுத்தான், நாககுமாரனும் அவளுடன் கூடி இன்புற்று வாழ்ந்து வந்தான்.

குரல் 2. அவ்வமயம் மாவியாளன் நாககுமாரனிடம் “பாண்டிய நாட்டின் தென்மதுரையை ஆட்சி செய்யும் மேகவாகனனின் மகள் சிரீமதி என்பவள் சிறந்த அழகி. அத்துடன் திறமைமிக்கவள், நடனத்தில் மிருதங்கத்தில் தன்னை யார் வெற்றி கொளிகிறார்களோ, அவனே தனக்குரிய நாயகன் என்று கூறி வஞ்சினம் செய்துள்ளாள்” என்று கூறினான்.

குரல் 1. மாவியாளன் கூறிய செய்தியைக் கேட்டு மனம் மகிழ்ந்த நாககுமாரன் மதுரை நகர் சென்றான். அங்கு சிரீமதியை மிருதங்க இசைப் போட்டியில் வெற்றி கொண்டு சுயம்வரம் மூலம் மணம் செய்து கொண்டான்.

குரல் 2. சிரீமதியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் நாளில் அரச சபைக்குவந்த கப்பல் வணிகன் ஒருவனிடம் நீ அற்புத நிகழ்ச்சி ஏதேனும் கண்டதுண்டா? கண்டிருந்தால் கூறுவாய் என்றான் நாககுமாரன்.

குரல் 1. அலைவீசும் கடல்நடுவே பூமிதிலகமாபுரம் என்ற பெயருடைய பொன்மயமான வண்ணங்களும் கூடிய அருகன் ஆலயம் உள்ளது. அதன் முன்னர் நண்பகல் நேரத்தில் ஐந்நூறு விஞ்சைக் கன்னியர்கள் வந்து ஓவென ஒரே நேரத்தில் அலறிப் பேரொ செய்கின்றனர். அதன் காரணம் யாதென அறியேன்” என்றான் வணிகன்.

குரல் 2. அதனைக்கேட்ட நாககுமாரன் தனது வித்யா சக்தியால் தன் வித்தைகளை நினைத்தான். அவைகளும் வந்தன. பின்னர் தனக்கு விருப்பமான தோழர்களுடன் அத்தீவை அடைந்தான்.

குரல் 1. அங்குள்ள பொன்மயமான ஜினாலயத்தைக் கண்டு தொழுது வலங்கொண்டு பணிந்து துதி செய்தான். பின்னர் ஆலயத்தின் முன்னர் எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

குரல் 2. நண்பகல் நேரத்தில் மங்கையர் ஐந்நூறு பேரும் ஒரே வரிசையில் நின்று ஓ என்று அலறினர். உடன் மலர்மாலை அணிந்த நாககுமாரன் அவர்களை அழைத்தான்.

குரல் 1. அருகன் ஆலயத்தின் முன்னர் இவ்வேளையில் வந்து அலறும் நீங்கள் யாவீர் என்று கேட்டாள். அவங்களுள் தரணிசுந்தரி என்பவள் கூறத்தொடங்கினாள்.

குரல் 2. ஐயனே'. அருமைசான்ற வெள்ளிமலை மீது கொடிகள் அசைந்தாடும் பிரிதிவி திலகம் என்ற பெயருடைய மாநகரம் எங்கள் நகரம். எங்கள் தந்தை வரதிட்சகன். எங்களுடைய தாய்மாமன் வாயுவேகன் என்பவன் அழகற்றவன். அவன் எங்களை மணம் செய்து தருமாறு தந்தையிடம் கேட்டான்.

குரல் 1. எங்கள் தந்தை இதற்கு உடன்படாமையால் வாயுவேகன் வெகுண்டுவந்து போர் செய்து எங்கள் தந்தையைக் கொன்று விட்டான். எங்கள் சகோதரர்களைப் பாதாளச் சிறையில் போட்டான்.

குரல் 2. எங்களையும் வித்தையின் ஆற்றலால் சிறை செய்து கொண்டுவந்து மணம் செய்துகொள்ளுமாறு கேட்டான். நாங்கள் எங்கள் தந்தையைக் கொலை செய்த உன்னைக் கொல்லும் மகா புருஷனையே மணப்போம் என்று கூறினோம்.

குரல் 1. அவனும், " என்னைக் கொல்பவனை ஆறுமாதங்களுக்குள் கொண்டு வாருங்கள் எனக் கூறி, இக்காட்டில் இருட்டு அறையில் அடைத்து வைத்துள்ளான்.

குரல் 2. எப்போதேனும் ஆலயவழிபாட்டிற்கு வரும்போது இந்த ஆலயத்தில வழிபாடு செய்ய வரும் ஆண்களில் வித்யாதரர் எவரேனும் எங்களுக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றுவர் என்ற எண்ணத்தில் இவ்வாறு இங்கு வந்து அலறிக் கொண்டு இருக்கிறோம்" என்றாள்.

குரல் 1. உடன் நாககுமாரன் அவர்களுக்குக் காவாக இருந்த காவலரை விரட்டிவிட்டுப் போருக்குப் புறப்பட்டுச் சென்றான், வாயுவேகனை சந்திரஹாசம் எனும் வாளால் கொன்றுவிட்டு அவர்களின் நாட்டை இரட்ச, மகா இரட்சகன் என்ற சகோதரர்கள் வசம் கொடுத்துவிட்டு அக்கன்னியர்களை மணம் செய்து கொண்டான்.

குரல் 2. நாககுமாரன் ஐந்நூறு மங்கையரை வேள்வி முறைப்படித் திருமணம் செய்து கொண்டு, உள்ளன்போடு உவகைக் கடல் மூழ்கி இருந்தான்.

குரல் 1. பின்னர் ஐந்நூறு அடிமைகள் தாமே வய வந்து ஐயனே நாங்கள் அவதிக ஞான முனிவரிடம் எங்கள் தலைவன் யாரெனக் கேட்டோம். அவரும் வாயுவேகனை வதம் செய்பவனே உங்கள் தலைவன் என்று அருளுரை வழங்கனார். எனவே உன்னிடம் இங்கு வந்தோம் என்று தஞ்சம் அடைந்தனர். நன்றெனக் கூறிய நாககுமாரன் உளம் மகிழ்ந்து வாழ்ந்தான்.

குரல் 2. அப்போது கங்க நாட்டின் தலைநகரமாம் இரத்தினபுரத்தில் சந்திரகுப்தன் என்ற அரசன் ஆண்டுவந்தான் அவனது அரசி சந்திரமதியாவாள். இவர்களின் நற்புதல்வி மதன மஞ்சிகை என்பது.

குரல் 1. மதன மஞ்சிகையின் கட்டழைக் கேள்விப்பட்ட நாககுமாரன் அந்நகரை அடைந்தான். நாககுமாரன் புகழைக் கேள்வியுற்ற சந்திரகுப்தன் மனமகிழ்ச்சியுடன் தன் மகள் மதன மஞ்சிகையை கன்னிகாதானத் திருமணம் செய்து தந்தான்.

குரல் 2. அதன்பின்னர் கங்கைநதியால் வளம் கொளிக்கும் கங்காள நாட்டின் திரிபுவனத்திலகபுரம் வந்து சேர்ந்தான் நாககுமாரன். அதன் மன்னன் வீஜயந்திரன். மாதேவி விஜயை என்பவள். இவர்தம் மகள் சர்வ இலக்கணம் படைத்த இலக்கணை என்பவள்.

குரல் 1. பெருமைமிக்க நாககுமாரன் அந்நகரில் வேள்வி முறைப்படி அவளை மணம் செய்து கொண்டு இன்பம் துய்த்து வாழ்ந்துவந்தான். அந்நேரம் அந்நகரின் புறத்தே உள்ள வனத்துள் பிஹிதாஸ்வரர் என்னும் முனிவர் வந்து தங்கினார்.

குரல் 2. ஆத்மனில் வந்து கலக்கும் வினைகளின் ஊற்றினைத் தடுத்து நிறுத்தும் அருந்தவமுனிவரை நாககுமாரன் சென்று வணங்கிப் பலவாறு புகழ்ந்துரைத்து நல்லறம் கேட்டு மகிழ்ந்திருந்தான்.

குரல் 1. பின்னர் முனிவரனை வணங்கி, ‘சுவாமி’ எனக்கு மனைவியர் பலர் உள்ளனர். எனினும் இலக்கணையின் மீது மிகுதியான அன்பு. தோன்றுவதற்குக் காரணம் யாது? என்று வினவினான். அம்முனிவரும் தமது அவதி ஞானத்தால் உணர்ந்து கூறத் தலைப்பட்டார்.

இலக்கணையெனுமகள் இலக்கணமுடையவள்
மிக்க அண்ணலுஞ் சென்று மெய்ம்மைவேள்விதன்மையல்
அக்கணத் தவணெய்தி அவளுடன் போகந்துய்த்தபின்
தொக்க காவு தன்னுள்ளே தொள் முனிவர் வந்தரோ.
ஊற்றினைச் செறித்திடும் உறுதவனுடைச் சாரணை
நாற்றமிக் குமரனு நன்புறப் பணிந்த பின்
ஏற்றவறங் கேட்டு உடன் இருந்த இலக்கணையின் மேல்
ஏற்றமோக இமன்னென இயன்முனி உரைப்பரே.

(நாககுமாரகாவியம் - நான்காம் சுருக்கம் - பா.எண் - 143, 144)

(நான்காம் சுருக்கம் முடிந்தது)

ஐந்தாம் சுருக்கம்

இடம் *கங்காள நாடு*
உறுப்பினர் *நாககுமாரன், பிஹிதாஸ்வர முனிவர், சயந்தர மன்னன்.*

நாககுமாரன், சுவாமிகளுக்கு வந்தனம்’. எனக்குப் பல மனைவியர் இருந்தும் இலக்கணையின் மீது மிகுதியான அன்பு ஏற்படுகிறதே? அதன் காரணம் யாது?

பிஹிதாஸ்வரர் உன் பழம்பிறப்பின் தொடர்பு நாககுமாரனே’.

நாககுமாரன் என்பழம்பிறப்பா? நான் என்னவாகப் பிறந்திருந்தேன்’. அறிய ஆவல் மேலோங்குகிறது. கூறுங்கள் முனிவரே’.

பிஹிதாஸ்வரர் நாவலந்தீவில் ஐராவதம் என்னும் சேத்திரத்தில் ஆரியகாண்டத்தில், உயர்ந்த மாளிகைகளை உடைய வீதேசோகரம் என்ற நகரம் ஒன்று இருந்தது. அதன் அரசன் மன்மதனைப் போன்ற அழகுடைய விக்கிரமன் ஆவான், அவன் மனைவி நீலோற்பல மலரைப் போன்ற கண்களையுடைய தேவி என்பவள். அதே நேரம் அந்நகரில் செல்வச் செழிப்புடன் புகழ் மிக்க வணிகன் தனதத்தன் என்பவன் வாழ்ந்துவந்தான்.

நாககுமாரன் வணிகனுக்கும் மன்னனுக்கும் ஏதேனும் பிணக்கு நேர்ந்ததா முனிகளே’.

பிஹிதாஸ்வரர் ஊகங்கள் வேண்டாம். அமைதியாகக் கேள். தனதத்தனின் மனைவி தனதத்தை இவர்களின் மகன் பெயர் நாகதத்தன் என்பது.

நாககுமாரனே’. அந்நகரில் மற்றொரு வணிகனும் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் வசுதத்தன் என்பது. அவன் மனைவி நல்லாள் வசுமதி என்பவள். இவர்களது மகளின் பெயர் நாகவசு என்பதாகும். நற்பண்புகள் மிக்க நாகதத்தன் என்பவன் நற்குணமுடைய வசுதத்தன் மகள் நாகவசுவைத் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்ந்து வந்தான். அப்போது அந்நகரின்புறத்தே இருக்கும் வனத்துள் உள்ள ஜினாலயத்தில் பரம முனிவர் முனிகுப்த ஆச்சாரியார் என்பவர் வந்து தங்கியிருந்தார்.

நாகுமாரன் ஜினாலயத்தில் வழிபாடு செய்ய வணிகர் குடும்பம் சென்றதா?

பிஹிதாஸ்வரர் ஆமாம். நாக நத்தன் ஜினாலயம் சென்று முனிவரின் பாதங்களை வணங்கினான். வாழ்க்கைக்கு நலம் பயக்கும் நல்லறம் கேட்டு மகிழ்ந்தான். பின்னர் பஞ்சமி தினத்தில் உண்ணா நோன்பு விரதம் மேற்கொண்டான்.

நாககுமாரன் பஞ்சமி நோன்பு என்பார்களே’. அதனை நாகபஞ்ச்மி எனவும் சிலரும் உரைப்பரே’. அந்த விரதமா?

பிஹறதாஸ்வரர் சரியகச் சொன்னாய்'. நாககுமாரா'. அதே நோன்புதான், போகங்களையும் புண்ணியங்களையும் உண்டாக்கக் கூடிய பூரணமதன சுக்கில பட்ச பஞ்சமி தினத்தன்று, நள்ளிரவு நேரத்தில் நோன்பிருந்த நாகதத்தனுக்குப் பசித்துன்பம் மிகுதியாக ஏற்பட்டது.

நாககுமாரன் நோன்பின் போது உணவு கூடாதுதான்'.மிகுதியானால் பசித்துயரைத் தாங்குதல் எங்ஙனம்'.

பிஹறதாஸ்வரர் இயலாதுதான் எனவே அவனது பெற்றோர் நோன்பினைக் கைவிடுமாறு வேண்டியுள்ளனர், ஆனால் பெற்றோர் வேண்டியும் நாகதத்தன் விரதத்தைக் கைவிடாமல் தருமத் தியானத்துடன் வடக்கு நோக்கித் தவம் செய்து தன் உடலைவிட்டு சௌதர்ம கல்பத்தில் சூரியப் பிரப விமானத்தில் தேவனாகப் பிறந்தான்.

நாகுமாரன் பலே'.வைராக்கியம் மிக்கவன். நோன்பிற்கான பலனையும் பெற்றுவிட்டான். அவன் தேவி என்னவானாள்?

பிஹறதாஸ்வரர் கயல்மீன் போன்ற கண்களையுடைய நாகவசுவும் அவ்வாறே நோன்பு நோற்று அத்தேவனுக்கே மனைவியாகச் சென்று சேர்ந்தாள்.

நாககுமாரன் ஆஹா........... ஆஹாஹா............ என்னே', புனிதக் காதல்'.

பிஹறதாஸ்வரர் ஆமாம்'. புனிதக் காதல்தான். இருவரும் தேவ கதியில் ஐந்து பல்லம் ஆயுளுடன் தேவ இன்பம் அனுபவித்த பிறகு இங்கு வந்து பிறந்துள்ளனர்.

நாககுமாரன் பலே......... பலே........... ஆச்சிரியமாக உள்ளது'. மீண்டும் இங்கு வந்து பிறந்துள்ளார்களா? யார்....... யார் அவர்கள் விரைந்து கூறுங்கள் சுவாமி'.

பிஹறதாஸ்வரர் அவர்கள் வேறு யாருமல்ல. அந்த தேவன் நீதான்'.

நாககுமாரன்'. *(ஆச்சரியமும் அதிர்ச்சியும் கலந்த குரல்)* நானா? அந்த தேவமகன் நானா'............. நம்ப முடியவில்லை............ நம்ப முடியவில்லை நீங்கள் உரைப்பதால் நம்பாமலும் இசுக்க முடியவில்லை.

பிஹறதாஸ்வரர் நீதான் அந்த தேவமகன்...... அந்த தேவமகனின் தேவக் காத யாரெனக் கேட்கவில்லையே நீ'.

நாககுமாரன் ஆமாம்'. ஆமாம்............. சொல்லுங்கள் அவள் எங்கிருக்கிறாள்?

பிஹறதாஸ்வரர் இத்தனை திருமணங்கள் செய்த பின்பும் உனக்குப் பேராசை தான். அந்தப் பெண் வேறு எங்கோ இருப்பாள்'. அந்தநாட்டிற்குச் சென்று அவளையும் மணமுடித்து வரலாம் என்று எண்ணமா? அவளை ஏற்கனவே நீமணமுடித்து விட்டாய்?உன் மனைவியருள் ஒருவள்தான் அவள்.

நாககுமாரன் என்ன ஆச்சரியம். என் மனைவியருள் ஒருவளா அவள். என் மனைவியர் அத்தனை பேரும் என்மீது ஒரே மாதிரியான இன்ப அன்பினைத்தான் கொண்டுள்ளனர். ஆனால் எனக்குத்தான் அவர்களில் இலக்கணையின் மீது மட்டும் கூடுதல் சிநேகம். அதன் காரணத்தைத் தான் உங்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை அவள்தானா?

பிஹிதாஸ்வரர் உன் மதிநுட்பத்தைப் பாராட்டுகிறேன். இத்துனை வெற்றிகளுக்குமான காரணமும் உன் மதிநுட்பமே. உன் ஊகம் சரி இலக்கணைதான் அவள். அந்த தேவ கன்னிகை நாகவசுவே இலக்கணையாகப் பிறந்துவந்துள்ளாள். எனவேதான் உனக்கு அவள் மீதுமட்டும் தனியாக மிகுந்த அன்பு உண்டாயிற்று.

நாககுமாரன்'. இயல்பான மானிடரைத் தேவகதிக்கு உயர்த்தி மீண்டும் மானுடராக்கினால் அவர்களைக் காதலால் இணைக்கும் சக்தி பஞ்சமி நோன்பிற்கு உண்டா? அற்புதம்.......... வாழ்க்கைக்கு உயர்வையும் வெற்றியையும் தரும் பஞ்சமி நோன்பை எங்களுக்கு மீண்டும் தந்தருள் வீராக'.

பிஹிதாஸ்வரர் கார்த்திகை மாதம், பங்குனிமாதம் அல்லது வெப்பம் மிகுந்த ஆடிமாதத்தில் சுக்கில பட்சத்தில் வரும் பஞ்சமியே நோன்பிற்குரிய பஞ்சமியாகும். அப்பஞ்சமிதினத்திற்கு முந்தைய நான்கு நாட்கள் ஒரு வேளை மட்டும் உணவு உட்கொண்டு, ஐந்தாம் நாள் பஞ்சமி தினத்தன்று உண்ணா நோன்பு மேற்கொள்ள வேண்டும். அதாவது உபவாசம் இருத்தல் வேண்டும், அதைப்போன்று மாதா மாதம் வரும் பஞ்சமியில் தொடர்ந்து நோன்பிருந்து விரதத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். இதுவே பஞ்சமி நோன்பாகும். நாகதத்தனும், நாகவசுவும் மேற்கொண்டு மேன்மையுற்றதால் நாகபஞ்சமி என்றே பின்னர் அழைக்கப்படுகிறது. இதுவே நாகபஞ்சமி நோன்பாகும்.

நாககுமாரன் இதனை முறைப்படிக் கடைப்பிடக்கிறோம் முனிவரே'.

பிஹிதாஸ்வரர் இந்த முறைப்படி பஞ்சமி நோன்பைச் சிறந்த முறையில் மேற்கொண்டு நோற்பதுடன் எல்லையற்ற குணசீலராகிய அருகதேவன் பூசையும் செய்ய வேண்டும். அருளறம் மின்ன முனிவர்களுக்குத் தானமும் செய்ய வேண்டும், அவ்வாறு செய்தால் தேவருலகத்தில் இந்திரபதவியைப் பெற்றுசு சுகம் பெறலாம். பின்னர் வினைக்கடகுகளை அறுத்துவிட்டு வீடுபேறும் (முத்தி) அடையலாம்.

நாககுமாரன் நன்றி'.முனிவரே'. நான் இலக்கணையைச் சந்தித்து எல்லாம் கூறவேண்டும். நாகபஞ்சமி நோன்பைத் தொடருவேன்'. விடைதாருங்கள்'.

பிஹிதாஸ்வரர் மங்கலம் உண்டாகட்டும் நாககுமாரா'. நீயும், இலக்கணையும் நற்கதியடைவர். சென்று வா'.

குரல் 1. இவ்வாறு முனிகுப்த ஆச்சாரியர் கூறியரைக் கேட்ட நாககுமாரன் அவரைப்பணிந்து வணங்கிச் சென்ற பின் இலக்கணையிடம் அனைத்தும்

உரைத்தான். எல்லையில்லா மகிழ்வெய்தியவள் விரத மேன்மை எண்ணிவியந்தாள்.

குரல் 2. பஞ்சவிரதம் மேற்கொண்டனர். இவ்வாறு இனிதே வாழ்ந்து வரும் நாளில் நயந்தரன் என்ற அமைச்சன் நாககுமாரனை வணங்கி அவன் தந்தை சயந்தரன் உடனே அவனை அழைத்து வரச் சொன்னதாகக் கூறி வந்தான்.

குரல் 1. நல்லமைச்சன் கூறியதைக்கேட்டதும் நாற்படைகள் சூழ்ந்து வர இலக்கணையுடன் பெரிய பட்டத்து யானையின் பிடரியின் மீது ஏறிக் கொண்டு தன் நண்பர்கள் உடன்வரப் புறப்பட்டான்.

குரல் 2. தேவர்களுக்கு இறைவனைப் போன்று அழகுடன் விளங்கும் நாககுமாரன் தன் தந்தையின் மாறிகையை அடைந்தான். தந்தை சயந்தரமன்னன் தன்மகனை எதிர் கொண்டு அழைத்து அன்புடன் வரவேற்றான்.

குரல் 1. நாககுமாரன் பணிவுடன் அவர் திருவடிகளைப் பணிந்து தொழுதான். தந்தையும் மகனை ஆதரவுடன் மார்புறத் தழுவி அரண்மனைக்கு அழைத்துச் சென்று இனிதே இருந்தனர்.

குரல் 2. இலக்ணைதவிர, தான் சென்ற இடங்களில் எல்லாம் வேள்வி முறைப்படிச் சிறப்பாகச் திருமணம் செய்து கொண்ட வேல்விழி மங்கையர்களை எல்லாம் ஒன்று சேர்ந்து வருக என்று அழைப்பு விடுத்தான். அவர்களும் வந்து சேர்ந்ததனர்.

குரல் 1. சித்திரப் பாவை போன்ற அந்த அழகிய பெண்களுடன் இனிய இன்பத்தை அனுபவித்துக் கொண்டு நாககுமாரன் வாழ்ந்து வந்தான், அப்போது அவன் தந்தைக்கு வாழ்க்கையின் நிலையாமை குறித்து ஈடுபாடு ஏற்பட்டது.

குரல் 2. எனவே வைராக்யம் கொண்டு அகப்புறப்பற்றுகளைத் துறந்து நாட்டின் அரசாட்சியை மகனிடம் ஒப்படைக்க எண்ணினான், நாக குமாரனுக்கு மணிமகுடம் சூட்டினான்.

குரல் 1. அரசபாரம் ஏற்கச் செய்த பின்னர், உபபோகம், போகம் ஆகியன துய்பதைவிட்டு துறவு மேற்கொண்டான். மனவசனகாயம் அடக்கி நோற்கின்ற பிஹிதாஸ்வர முனிவருடைய பாதங்களைத் தொழுது வணங்கினான்.

குரல் 2. பல சிற்றரசர்களுடன் துறவு மேற்கொண்டு ஒரு மனத்துடன் தவமியற்றும் இறைவன் இயற்கை உருவத்தைப் போன்று பற்றற்ற நிர்கந்தத் துறவை மேற்கொண்டான்.

நாககுமாரன் தனக்கு நன்மகுடம் சூட்டிப்
போக உபபோகம் விட்டுப் புரவனும் போதி
யாகமனடைக்கு முனி அவரடிப் பணிந்து
யேக மனமாகியவன் இறைவனுருக் கொண்டான்.
இருவினைகெடுத்தவனும் இன்ப உலகடைந்தான்

பிரிதிவி நற்றேவியும் தன் பெருமகனை விட்டு
சிரிமதியெனுந்துறவி சீரடி பணிந்து
அரியதவந் தரித்து அவளும் அச்சுதமடைந்தாள்.
(நாககுமாரகாவியம் - ஐந்தாம் சுருக்கம் - பா.எண் 157, 158)

குரல் 1. சயந்தர மன்னன் இருவினைகளையும் அதாவது காதி, அகாதி வினைகள் கெடுத்துவிட்டு இன்ப உலகத்தை அடைந்தான், அவன் மனைவி பிரிதிவிதேவி தன் பெருமைமிகு மகன் நாககுமாரனைப் பிரியவும் துணிந்தாள்.

குரல் 2. கணவனின் வழியில் சிரீமதி எனும் பெண் துறவியை வணங்கித் துறவு மேற்கொண்டு அருந்தவம் புரிந்து அச்சுத கல்பத்தை அடைந்தாள்.

குரல் 1. நாககுமாரனும் எல்கைகயும் செல்வமுமூ பெருகுவதை உணர்ந்தான், பாதி இராச்சியத்தை வியாளனுக்குே கொடுத்தான், ஏனைய பல தோழர்களுக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்பப் பல நாடுகளை வழங்கி அவற்றிற்கு அவர்களை உரிமையாக்கினான்.

குரல் 2. தான் மணம் செய்து கொண்ட மங்கையர் பலருள்ளும் இலக்கணைக்குப் பட்டத்து அரசி என்ற மாதேவிப் பட்டத்தைக் கொடுத்துத் தலைமைத் தகுதியை வழங்கனரின்.

குரல் 1. இலக்கணையார் வயிற்றில் ஒரு நல்ல ஆண்மகன் பிறந்து நலமுடன் இருந்தான். அழகுமிகு அவனது நற்பெயர் தேவகுமாரன் என்பதாகும்.

குரல் 2. அவன் அரசர்களுக்கு உரிய கலை, சிலை, வேல் முதயவற்றைக் கற்றான். பயின்ற பின் யானை, தேர், குதிரை முதயவற்றில் ஏறி ஊர்ந்து சென்றும் களிப்புடன் தினமும் வாழ்ந்திருந்தான்.

குரல் 1. எழுமதில் சூழ்ந்த நிலத்தில் அழகுடன் திகழும் செயற்கரிய சிம்மாசனத்தின் மீது பெருமை மிக்க நாககுமாரன் மாக மண்டலேசுரனாய் இனிது வீற்றிருந்தான்.

குரல் 2. மணிமுடி சூடிய மன்னர்கள் எண்ணாயிரம் பேர் இருமருங்கும் புடைசூழ கவரி வீசினர், இவ்வாறாக 108 ஆண்டுகள் இனிதே செங்கோல் ஆட்சி செலுத்திவந்தான்.

குரல் 1. அரசர்களுக்கு எல்லாம் அரசனாகிய நாககுமாரன் இயல்பாக அமர்ந்திருக்கும் நேரத்தில் ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் விரைவில் தோன்றி மறையும் காட்சியைக் கண்டான்.

குரல் 2. அக்காட்சி அவனுள் பலமாற்றங்களை ஏற்படுத்தியது. வாழ்வில் விரக்தி ஏற்பட, மனதில் வைராக்கிய பாவம் கொண்டு ஆட்சியைத் தன் மகன் தேவகுமாரனுக்கு ஒப்படைத்து விட்டான்.

குரல் 1. அவனுக்கு முடிசூட்டிவிட்டு நல்லாட்சியை அவன் வழங்கும் வரைக் காத்திருந்தான், பின் நற்றவம் செய்வதற்காகத் துறவு மேற்கொள்வதற்கு விருப்புடன் தயாரானான்.

குரல் 2. வியாளன் முதய தோழர்களுடன் தன்னிடம் வந்து சேர்ந்த ஆயிரம் தொண்டர்களுடன் நாககுமாரன் சென்று "அமலமதி" என்ற கேவல ஞானியைக் கண்டு வணங்கித் துறவறம் மேற்கொண்டான்.

குரல் 1. இயற்கை உருவமாகிய நிர்வாணத்தைக் கைக்கொண்டு நோன்பு மேற்கலானான். செந்தாமரையை ஒத்துள்ள இலக்கணை முதலானவர்களும் பதுமஸ்ரீ என்ற ஆரியாங்கனையை வணங்கித் துறவு மேற்கண்டார்கள்.

<u>மகனுக்கு முடிசூட்டித்தான் துறவு கொள்ளல்</u>

அரசன் இனிதியல்பினில் அமர்ந்திருக்கும் அளவில்
பரவுமுகில் மாய்க்திடப் பார்த்திபன் விரத்தி
விரவுமிகு குமரன் மிசை வீறுமுடி சூட்டி
அரியதவந்தாங்க அவன் அன்புடன் எழுந்தான்

(பா.எண் - 162)

<u>இலக்கணையும் துறவு மேற்கொள்ளுதல்</u>

அமலமதி கேவயின் அடியிணை வணங்கி
விமலனுருக் கொண்டனன் நல்வேந்தர்பலர் கூட
கமலமல ராணிகர் நற்காட்சி இலக்கணையும்
துமிலமனைப் பதுமையெனுந் துறவரடி பணிந்தாள்.

(நாககுமாரகாவியம் - ஐந்தாம் சுருக்கம் - பா.எண் - 163)

குரல் 2. நறுமணம் மிக்க குழலையுடைய இலக்கணையும் ஏனைய மாதர்களுடன் கடுந்தவத்தை மேற்கொண்டு இனிதே இருந்துவந்தாள்.

குரல் 1. ஒரு நன்னாளில் குற்றமற்ற சிறப்புடைய நாககுமார முனிவன் தன்னைச் சுற்றிப் பற்றியுள்ள கொடிய காதி அகாதி வினைகளை வென்று சித்தபதம் சென்று சேர்ந்தான்.

குரல் 2. வியாளன் மாவியாளன் என்ற இருவரும் சிறந்த தவத்தைனை மேற்கொண்டு, உயிரின் இயல்பாகிய தருமத்தியானம், சுக்கிலத் தியானங்களால் எண்வினைகளை வேரறுத்து வெற்றிபெற்றனர்.

குரல் 1. தேவர்கள் வெற்றி முழக்கமிட்டுத் துடிபாடினர், சிறப்பான கேவல ஞான பூசையும் செய்தனர், மயக்கம் நீங்கிப் பிறப்பு இறப்பு இல்லாத முக்தி உலகைச் சேர்ந்தனர்.

குரல் 2. அசேத்தியர், அபேத்தியர் ஆகிய இருவரும் அரிய தவத்தின் சிறப்பினால் இருவினைகளை வென்று பேரின்முடைய சித்தியைச் சேர்ந்தார்கள்.

குரல் 1. மற்றவர் அனைவரும் தாம் தாம் மேற்கொண்ட தவத்தின் ஆற்றலுக்கு ஏற்பச் செல்வம்மிக்க சௌதர்ம கல்பம் முதலான தேவருலகைச் சேர்ந்து தேவசுகம் அனுபவித்தனர்.

குரல் 2. நாககுமாரனுக்கு ஆயுள் ஆயிரத்து நூற்று அறுபத்து நான்கு ஆண்டுகள் (1164) ஆகும். அவற்றுள் குமார காலம் முன்னூறு ஆண்டுகள்(300) போகம் மிக்க இப்பூமியில் ஆட்சி செய்த காலம் (800) எண்ணூறு நற்றவம் புரிந்த ஆண்டுகள் அறுபத்து நான்கு (64).

குரல் 1. நாக குமார நன்முனிவர் கேவல ஞானம் பெற்று தவத்தில் சிறந்த முனிவர்கள் உடன்வர, நால்வகைத் தேவர்கூட்டங்கள் முதய கணங்களுடன் போகபூமி எல்லாம் திருவுலாச் சென்றான்.

குரல் 2. இல்லறஒழுக்காத்தார்களும்,துறவற ஒழுக்கத்தினருக்கும் நல்ல தானத்தின் பயனால் அடையக் கூடிய தருமத்தை உபதேசம் செய்த காலம் அறுபத்தோராண்டுகள் ஆகும்.

குரல் 1. அதன்பிறகு, காதி அகாதி வினைகளையும் கெடுத்து சித்த பதவியை அடைந்து பிறவியின் பயனை அடைந்து இன்புற்றார்.

குரல் 2. நாக குமாரனின் இந்தக் கதையைப் படிப்போரும் எழுதுவோரும் ஆகிய எல்லோரும் மக்கட்பேறும் பெருவாழ்வும் பெற்றுத் தேவேந்திரன் போல் வாழ்வர்

குரல் 1. சினத்தை உண்டாக்கும் கவலை நீங்கி, நற்காட்சி நல்ஞானம், நல்ஒழுக்கம் உடையவராய் வாழ்ந்து தேவலோக இன்பம் பெற்று இன்புறுவர்.

குரல் 2. உலகத்தோர்களே', அறம் ஒன்றைத் தவிரவேறொன்றும் நம் உயிர்க்குப் பாதுகாப்பாகும் அரண் இல்லை என்பதை உணர்வீர்களா'. பேராசை, தீய ஒழுக்கம் போன்று உயிர்க்குத் துன்பம் உண்டாக்கும் மறச் செயல்கள் வேறு ஒன்றும் இல்லை என்பதை அறிவீர்களாக'.

குரல் 1. இந்த உண்மையை உணர்ந்து தெளிந்து, கொடிய நாற்கதிப் பிறவிச் சூழலுக்குப் பயந்து, தீச் செயல்களைக் கைவிட்டு, இல்லற துறவற நெறியைப் பின்பற்றித் திருப்தியோடு வாழுங்கள்

நாககுமாரன் ஆயுள் நான்காண்டு ஐஞ்நூற்றிரட்டி
ஆகு நற்குமாரகாம் ஐந்து முத்திரட்டி
ருபாக பூமியான்ட பொருவிலெண்ணூறு ஆண்டு
ஆகு நற்றவத்தில் ஆண்டு அறுபத்து நான்கதாமே

(பா.எ. - 167)

மறுவறுமனையவர்க்கு மாதவர்தமக்கும் ஈந்த
பெறும் இருநிலங்கள் எங்கும் பெயர்ந்து நற்கேவயாய்
அறமழைபொழிந்த காலம் அறுபத்து ஓராண்டு சென்றார்
உறுதவர் தேவர் நான்கு முற்றெழு குழாத்தினோடே

(பா.எ. 168)

நூற்பயன்

இக்கதை எழுதி ஓதி இன்புறக் கேட்பவர்க்கும்
புதல்வர் நற்பொருளும் பெற்றுப் புரந்தரன் போல வாழ்ந்து
கதமுறு கவலை நீங்கிக் காட்சி நல்லறிவு முன்பாய்ப்
பதமிகு அமர யோகம் பாங்குடன் செல்வரன்றே'.

(பா.எ. 169)

உலகிற்கு அறவுரை

அறமின்றிப் பின்னை ஒன்றும் உயிர்க்கு அரண்இல்லை என்றும்
மறமின்றி யுயிர்க்கு இடர் மற்றொன்றும் இல்லை என்றும்
திறமிது உணர்ந்து தேறித் தீக்கதிப் பிறவிக்கு அஞ்சி
மறமிதை விட்டு அறத்தில் வாழுமின் உலகத்தீரே'.

(நாககுமார காவியம் - ஐந்தாம் சுருக்கம் - பா.எ. 170)

(ஐந்தாம் சுருக்கம் முற்றும்)

(நாககுமாரகாவியம் நிறைவடைந்தது)

படிப்பகம்
மிகக் குறைந்த செலவில்
நீங்கள் எழுதிய புத்தகங்கள்
கதைகள், கவிதைகள்,
கட்டுரைகள், மற்றும் பல தொகுப்புகளை
இணையத்தில் வெளியிட
இன்றே தொடர்புகொள்ளுங்கள்
Website: www.padippagam.com
Mobile : 89032 32330.